வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
ஏப்ரல் 15 – 21, 2015
பக்கம் 24
விலை 30/-

வாடிக்கையாளர், விளம்பரதாரர்
அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

# தனிமைப்படுத்தப்படும் நியாயங்கள்




1717 FOLLOW US
இப் புதுவருட காலத்தில்
சுவையான கதை பேச
சிறந்த IDD கட்டணங்கள்!
இப் புதுவருட பண்டிகைக் காலத்தில் உங்கள் அன்பு உறவுகளுடன் நிதமும் திசையெங்கும் சுவையான கதை பேச சிறந்த IDD கட்டணங்கள்.
இக் கட்டணங்கள் IDD Buddy அழைப்புகளுக்கு செல்லுபடியாகும்.



இந்தியா — நிலையான / கையடக்கத் தொலைபேசி ரூ. 1.50
குவைட் — நிலையான ரூ. 8.00 | கையடக்கத் தொலைபேசி ரூ. 10.00
ரூ. 9.00 | ரூ. 10.00
ரூ. 14.00
ரூ. 1.20
கட்டார் — நிலையான / கையடக்கத் தொலைபேசி ரூ. 15.00
அழையுங்கள் 100 <அழைப்பைப் பெறுபவரின் தேசக் குறியீடு> <அழைப்பைப் பெறுபவரின் இல.>
Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறந்த தந்தை மகளுக்கு வாழ்த்து

ஸ்கொட்லாந்தில் தந்தை ஒருவர் இறந்த பின்னும், தனது அன்பு மகளுக்கு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகிறார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள அப்ஹோல் Uphall என்ற சிறு நகரில் வசித்து வந்த ப்ரூஸ் மற்றும் ஜெனற் என்ற தம்பதியினருக்கு, கடந்த 2008 ஆம் ஆண்டு ஸோ (Zoc) என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது.

குழந்தை பிறந்த சில வாரங்களிலேயே ப்ரூஸ் தோல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். பிறந்த குழந்தையுடன் ஆசையோடு கொஞ்சும் நேரத்தில் தனது நோயை குணப்படுத்த தீவிரமாகப் போராடியுள்ளார்.



ஆனால், அவரது மகளுக்கு முதலாவது பிறந்த நாள் நெருங்கிய சமயத்தில் புற்றுநோயானது எலும்பு மற்றும் மூளைக்கு பரவிவிட்டது.

தன்னுடைய மகளின் மீது உயிரையே வைத்திருந்த ப்ரூஸ், ஒரு தந்தையாக தனது மகளுடன் நீண்ட வருடங்கள் வாழ வேண்டும். தனது மகளின் ஒவ்வொரு பிறந்த நாளிலும் அவளுடன் இருக்க வேண்டும் என தீர்மானித்தார்.

ஸோவின் முதலாவது பிறந்த நாளை கொண்டாடியதற்கு பிறகு, ப்ரூஸ் படுத்த படுக்கையாகிவிட்டார். தன்னுடைய மகளின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் ஒரு தந்தை என்கிற முறையில் அவளுக்கு பிறந்த நாள் வாழ்த்து அட்டை வழங்க வேண்டும் என நினைத்தார்.

உயிருக்கு போராடிய நிலையிலும், தனது மகளை நினைத்து, அவளுடன் வாழ்ந்துகொண்டிருப்பது போலவே உருக்கமான பிறந்த நாள் வாழ்த்து அட்டைகளை எழுதினார்.


தனது மகள் 21 வயது பூர்த்தி ஆகும் வரை, அவளது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் தன்னுடைய வாழ்த்து அட்டை அவளுக்கு சேர வேண்டும் என தனது மனைவியிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டு இறந்துள்ளார்.

அன்புக்கணவனின் வார்த்தையை மீறாத ஜெனற், தனது மகளின் ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் அவளது தந்தை உருக்கமுடன் எழுதிச்சென்ற பிறந்த நாள் வாழ்த்து அட்டையை அவளுக்கு வழங்கி வருகிறார்.

சமீபத்தில் 6 வயதை அடைந்த ஸோவின் தனது தந்தை 6ஆவது பிறந்த நாளிற்காக விட்டு சென்ற பிறந்த நாள் அட்டையை பிரித்து படித்து தனது தந்தை தன் மீது எவ்வளவு பாசமும் அன்பும் வைத்துள்ளார் என்பதை எண்ணி மகிழ்ந்துள்ளார்.

தனது கணவர் குறித்து பேசிய ஜெனட், என் மகளின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் எங்கள் வீட்டின் அருகில் உள்ள மலை உச்சிக்கு சென்று அந்த வாழ்த்து அட்டையை என் மகளுக்கு கொடுப்பேன்.

பின்பு, வானத்தை நோக்கி நம்முடைய மகளிடம் உங்கள் வாழ்த்து அட்டையை கொடுத்து விட்டேன் என உரக்க கூறுவேன். இதை எனது கணவர் சொர்க்கத்திலிருந்து பார்த்து மகிழ்ச்சி அடைவதாக நம்புகிறேன் என கூறியுள்ளார்.



மேலும் ஸோமீதும், தன் மீதும் உயிரையே வைத்திருந்த தன் கணவர் இப்போது இல்லாவிட்டாலும், அவர் எங்கள் மீது காட்டிய அன்பையும், பாசத்தையும் எங்கள் உயிர் உள்ள வரை மறக்க மாட்டோம் என கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

# உலக சாதனை படைத்த 100 வயதுமூதாட்டி

ஜப்பானில் தனது 100 ஆவது வயதில் பின் புற நீச்சல் போட்டியில் மிய்க்கோ நகோக்கா என்ற மூதாட்டி உலக சாதனை படைத்துள்ளார்.

ஜப்பான் நாட்டிலுள்ள மட்சுயாமா என்ற நகரில் மாஸ்டர்ஸ் நீச்சல் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியின் பெண்கள் பிரிவுக்கான பின் புற நீச்சல் போட்டியில் 100 வயது மூதாட்டி மிய்க்கோ நகோக்கா கலந்து கொண்டார். அவர், 1500 மீற்றர் தூரத்தை 1 மணி நேரம் 15 நிமிடம் 54 விநாடிகளில் பின் புறமாக நீச்சலடித்து உலக சாதனை படைத்துள்ளார்.

1914ஆம் ஆண்டு பிறந்த இவர் நீச்சல் தெரியாமல் இருந்து வந்தவர். இந்த நிலையில், அவரது முழங்காலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 82 வயதில் நீச்சல் பயிற்சியைக் கற்றுக்கொண்டுள்ளார்.

இதைத் தொடர்ந்த, கடந்த 2002 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் உள்ள கிரைஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் முதல் முறையாக கலந்துகொண்டார். அங்கு 50 மீற்றர் பின்புற நீச்சல் போட்டியில் வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

அதைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற 50 மீட்டர், 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் பின்புற நீச்சல் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்து வந்தார். பின்னர் அவரது 90 ஆவது வயதில் ஜப்பான் நாட்டின் தேசிய நீச்சல் வீராங்கனை என்ற அங்கீகாரத்தைப் பெற்றார்.



அவர், 800 மீற்றர் 'ப்ரீ ஸ்டைல்' பின்புற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு தேசிய அளவில் சாதனை படைத்தார்.

இந்தநிலையில் தற்போது, ஜப்பானில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் நீச்சல் போட்டியில் பெண்கள் ப்ரி ஸ்டைல் பிரிவுக்கான 1500 மீற்றர் பின் புற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு உலக சாதனை படைத்துள்ளார்.

சாதனைகளுக்கு முதுமை தடையல்ல என்பதையும் மன வலிமையும் பயிற்சியும் இருந்தால் எந்த வயதிலும் சாதனை படைக்கலாம் என்பதையும் மூதாட்டி மிய்க்கோ நகோக்கா நிரூபித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-ஆசாத்

# தனிமைப்படுத்தப்படும் நியாயங்கள்

விடுதலைப்புகள் அமைப்பை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டவர் எனக் கூறப்படும் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி என்பவருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தருமபுரத்தில் வசித்து வந்த ஜெயக்குமாரி என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் ஏறக்குறைய ஒரு வருடம் தடுத்து வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவருடன் கைது செய்யப்பட்டு சிறுவர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் மகள் விபூசிகாவும் நீதிமன்ற அனுமதியின் பேரில் தாயுடன் மீண்டும் இணைந்து கொண்டார்.

அவர்கள் தற்சமயம் குடாநாட்டில் உள்ள ஆலயம் ஒன்றில் தங்கியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அவர்கள் தங்குவதற்கு எவரும் வீடு வழங்க பயம் காரணமாக மறுத்து விட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

கணவனை இழந்த ஜெயக்குமாரி திருமலையைச் சேர்ந்தவர். ஏற்கனவே போரில் ஒரு மகனைப் பலி கொடுத்தவர். அடுத்த மகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர். தற்சமயம் தன் மகளுடனே தனியாக வசித்து வந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு பல இழப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்த ஒரு அநாதரவான தாய்க்கு தங்குவதற்கு ஒரு இடம் கொடுக்க எவருமே முன் வரவில்லை என்றால் தமிழ் மக்கள் மத்தியில் மனிதாபிமானம் செத்து விட்டதா என்ற கேள்வி எழலாம்.




நிச்சயமாக மனிதாபிமானமோ உதவி தேவைப்பட்டவர்களுக்குக் கரம் கொடுக்கும் மனப்பாங்கோ நலிவடைந்து போய் விடவில்லை. சில நியாயமான காரியங்களைச் செய்வதால் எதிர் கொள்ள வேண்டிய பயங்கரம் ஏற்படுத்தும் அச்சம் மனிதாபிமானத்துக்கும், மனிதர்களுக்குமிடையே ஒரு திரையை விழுத்தி இருக்கிறது.

அதிலும் ஜெயக்குமாரி ஒரு போராளிக்கு அடைக்கலம் கொடுத்தார் என்பதற்காக ஒரு வருடத் தடுப்புக் காவல் உட்படப் பல நெருக்கடிகளை அனுபவித்தவர். அவரின் மகளின் பூப்புனித நீராட்டில் கலந்து கொள்ளக்கூட அவர் அனுமதிக்கப்படவில்லை. அப்படியான ஒருவருக்கு ஆதரவு வழங்கினால் தங்களுக்கும் அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எழுவதைத் தவிர்க்க முடியாது.

இன்று வரை ஜெயக்குமாரி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் பொய்க்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் என்றே பலரும் நம்புகின்றனர். அவரின் வீட்டுக்குள் மறைந்திருந்த கோபி பொலிஸ் ஒருவரைச் சுட்டு விட்டுத் தப்பி ஓடி விட்டார் என்றே பொலிஸாரால் கூறப்பட்டது. பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட வீட்டுக்குள்ளிருந்து ஒரு தனி நபர் பொலிஸார் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு எப்படித் தப்பியோடினார் என்பதே கேள்வியாகும். காயம் பட்டதாகக் கூறப்படும் பொலிஸ்காரர் வைத்திருந்த துப்பாக்கி சுற்றி வளைத்த பொலிஸாரில் இருந்த துப்பாக்கிகள் என்பன ஏன் தப்பியோடியவரைச் சுடவில்லை என்பதற்கும் விடை கிடைக்கவில்லை.

ஆனால் ஜெயக்குமாரி காணாமற் போனோர் தொடர்பான போராட்டங்களில் முன்னின்றவர். தனது மகள் கைது செய்யப்பட்ட பின்பு இராணுவத்திடம் இருந்ததை புகைப்பட ஆதாரம் மூலம் வெளிப்படுத்தியவர். அதாவது அரச படையினரின் போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டு வந்தவர்.

எனவே அவர்களைப் பொறுத்த வரை ஜெக்குமாரி ஒரு ஆபத்தான பேர் வழி.

எனவே தான் அவர் பொய்க்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார் எனப்பல மனித உரிமை ஆர்வலர்களால் நம்பப்பட்டது.

அப்படியான வகையில் சிக்கலுக்கு உட்படுத்தப்பட்ட ஜெயக்குமாரிக்கு ஆதரவு வழங்கினால் தங்கள் மீது பொய்க்குற்றங்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டு விடக்கூடும் என்ற அச்சம் எழுவது தவிர்க்க முடியாததே.

அப்படியான நிலையில் ஜெயக்குமாரியைத் தனிமைப்படுத்தியது மக்களல்ல. அவர்கள் மனம் வெறுத்து அவர்களை கை விடவும் இல்லை.

அடிப்படையில் அவர்களைத் தனிமைப்படுத்தியது பயங்கரவாதத் தடைச்சட்டம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்கும் வரை எவரும் எந்த நேரமும் பொலிஸாரால் சுமத்தப்படும் எந்த ஒரு குற்றச்சாட்டின் பேரிலும் கைது செய்யப்பட்டுக் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்படலாம் என்ற நிலைமை இருக்கும் வரையும் மனிதாபிமானம் கூட அஞ்சி நடுங்கி மூலைக்குள் முடங்கி விடும் போக்கே நிலவி வரும்.

**பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருக்கும் வரை எவரும் எந்த நேரமும் பொலிஸாரால் சுமத்தப்படும் எந்த ஒரு குற்றச்சாட்டின் பேரிலும் கைது செய்யப்பட்டுக் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படலாம் என்ற நிலமை இருக்கும் வரையும் மனிதாபிமானம் கூட அஞ்சி நடுங்கி மூலைக்குள் முடங்கி விடும் போக்கே நிலவி வரும்.**

இன்று பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அரசியல் கைதிகள் என்ற பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பலர் விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களே.போராளிகளுக்குச் சோறு கொடுத்தார்கள். தங்க இடம் கொடுத்தார்கள். மோட்டார் சைக்கிள்களை இரவலாகக் கொடுத்தார்கள். போன்ற குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்கள் கூட 10 வருடம் 15 வருடம் எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது நீதி. நியாயம் எல்லாவற்றையும் விழுங்கி விட்டு பயங்கரவாத தடைச்சட்டம் எங்கும் அச்சத்தை மட்டும் பரப்பி வெறியாட்டம் போடுகிறது. இந்த நாட்டில் எந்த ஒரு தமிழ்க்குடிமகனுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலையே நிலவுகிறது.

ஒரு நல்லாட்சியை உருவாக்குவது என்ற வாக்குறுதியுடனேயே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. நீதியும். நியாயமும் கொண்ட ஒரு நல்லாட்சியை விரும்பியே தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனாவுக்கு பெருமளவில் வாக்களித்து இந்த அரசாங்கத்தை ஆட்சியில் ஏற்றினர். ஆனால் அந்த நல்லாட்சி , தமிழ் மக்களை எட்ட முடியாமல் பெருந்தடையாக இந்தப் பயங்கர வாதச்சட்டம் ஏற்படுத்தி வருகிறது. எந்த ஒரு நபரையும் புலிப்பூச் சாண்டி காட்டி, கைது செய்து, காலவரையறையின்றித் தடுத்து வைக்கும் அதிகாரத்தை இந்தச் சட்டம் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது. ஒரு பகுதி மக்களை எப்போதுமே ஒரு பகுதி அச்சம் கலந்த சூழலுக்குள் வைத்திருப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பது மட்டுமன்றி ஜனநாயக விரோத செயற்பாடுமாகும். ஓமந்தையில் கொழும்பில் ஒரு கலந்துரையாடலில் கலந்து கொள்ளச் சென்ற ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதையும் , அவர்கள் கஞ்சா வைத்திருந்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டமையையும் நாம் மறந்து விட முடியாது. பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் அந்த நிகழ்வில் அவர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது என்பது தான் முக்கிய விடயமாகும்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவிருந்த சமயத்தில் அந்த விசாரணைக்குழுவை இலங்கைக் குள் வர அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை. எனினும் ஸ்கைப் மூலம் சாட்சியங்களை வழங்கச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் தான் காணாமற்போனமை தொடர்பான வலுவான ஆதாரங்களைக் கொண்டிருந்த ஜெயக்குமாரி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டார். இந்த நிலையில் அவரால் சாட்சியளிக்க முடியாமல் போய்விட்டது.

தற்சமயம் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு உள்ளக விசாரணையை இலங்கை அரசு மேற்கொள் ளவுள்ளதாக வாக்களித்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் உள்ள நிலையில் மக்கள் அச்சமின்றி சாட்சியமளிக்க முடியுமா? விசாரணைகள் இடம்பெறும் போது வலுவான சாட்சியங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்கும் வரை ஜெயக்குமாரியும் , அவரைப் போன்ற ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களும் மட்டுமன்றி நீதியும்,நியாயமும் கூடத் தனிமைப்படுத்தப்படுவதும், மறுக்கப்படுவதும் தவிர்க்கப்பட முடியாது.

எனவே இந்த நாட்டில் உண்மையான ஒரு நல்லாட்சி நிலவ வேண்டுமானால் முதலில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படுவது மறுக்க முடியாத ஒரு தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கியை ஓரங்கட்டி ரணில் சாதிக்க நினைப்பது என்ன?

ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி இந்த நாட்டு தமிழர்கள் மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து பார்க்கும் காலம் இப்போது வந்துவிட்டது. மீண்டும் என்று ஏன் சொல்கின்றோம் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிளவை அடுத்து ஒருமுறை ரணில் என்பவர் யார் என்ற கேள்வி சத்தமாக தமிழர் தரப்பில் எழுப்பப்பட்டது.

பிறகு கால ஓட்டத்தில் அந்தக் கேள்வி கரைந்து மறைந்துவிட்டது அல்லது மறக்கடிக்கப்பட்டு விட்டது. தமிழர்களின் பிரச்சினைகள் ஒன்றா. இரண்டா எல்லாவற்றையும் ஞாபகம் வைத்துக்கொண்டு ஆய்வு செய்ய?

இன்று அந்த பிரச்சினை மீண்டும் எழுந்து வருகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் தமிழர் கொள்கை பற்றி கடந்த முறை பிரபாகரனும். அன்ரன் பாலசிங்கமும் கேள்வி எழுப்பினார்கள். இந்த முறை அதை விக்னேஸ்வரன் எழுப்பியுள்ளார். உண்மையில் பிரபாரகரனை விடவும், பாலசிங்கத்தை விடவும்



விக்னேஸ்வரனின் கேள்வி ஆளுமையுள்ளதாக இருக்கின்றது. இதன் காரணம் இரகசியம் அல்ல.

முன்னவர் இருவரும் ஆயுத போராட்டப் பரப்பைச் சார்ந்தவர்கள். எவ்வளவுதான் தமிழீழ விடுதலை புலிகளை தமிழர்கள் மதித்து ஏற்றுக்கொண்டு இருந்தாலும் கூட ஆயுதப் போராட்டத்தை தமிழர்கள் முழு மனதுடன் அங்கீகரித்தது கிடையாது. அதுதான் இன்னமும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உள்ளே ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் அமைப்புகளை தமிழரசு கட்சியில் இருந்து வேறு படுத்தி ஆட்டி வைக்கின்றது.

விக்னேஸ்வரன், இன்று ஜனநாயக அரசியல் பரப்பில் நின்றபடி ரணில் விக்கிரமசிங்கவை தோலுரித்துக் காட்டி வருகிறார். தனக்கே உரிய பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்தி அவர் எடுத்து வைக்கும் வாதங்கள் தர்க்க பொருத்தமானவையாக இருக்கின்றன. ஆகவே பிரபாகரன், பாலசிங்கம் போல் ஆயுத பலம் கொண்டு விக்னேஸ்வரனை நசுக்கி விட ரணில் விக்கிரமசிங்கவினால் இதுவரை முடியாமல் உள்ளது.

உண்மையில் 2013ஆம் வருடம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, இரண்டு வருடங்களாக நடந்துவரும் வடமாகாண சபையை, கடந்த ஆட்சி காலத்து தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வால் கூட அசைக்க முடியவில்லை.

அதாவது விக்னேஸ்வரனை சாய்க்க, மஹிந்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தன. விக்கியின் சம்பந்தி வாசுதேவ நாணயக்காராவைக் கொண்டுகூட அதை செய்விக்க மஹிந்த முயன்றார்.

இவை ரணிலுக்கு தெரியாத விடயங்கள் அல்ல. உண்மையில் விக்னேஸ்வரன் அரசியலில் ரணிலை விட அனுபவம் குறைந்தவர். பதவியிலும் குறைந்தவர். இந்த நிலையில் அனுபவசாலியான ரணில் ஏன் விக்னேஸ்வரனுடன் வீம்பாக மோதுகிறார் என்பதன் பின்னணி இன்னமும் புரியா புதிராகவே இருக்கின்றது.


**ரணில் பகிரங்கமாக சொன்ன முதல் காரணம்.**

மாகாணசபையில் இன ஒழிப்பு தீர்மானம் கொண்டு வந்துவிட்டார். ஆகவே அதை நான் ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை. இதுபோன்ற ரணிலின் கருத்துகள் செல்லுபடியாகவில்லை. அவரைவிட அதிக பொறுப்புக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதை ஒரு காரணமாகக் கொண்டு விக்னேஸ்வரனுடன் பகைமை பாராட்டவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இரண்டாம் நாள் கொழும்பில் சிறிசேனவை விக்கி சந்தித்து பேசினார். சந்திரிக்கா அம்மையாரும் சண்டை போடவில்லை. ஹெல உறுமயகாரர்கள்கூட ஆட்சேபித்து விட்டு பிறகு அதை மறந்து விட்டார்கள். ஆனால், ரணில் மாத்திரம் பகைமை பாராட்டுவது வியப்பாக உள்ளது.

தனது மாகாணசபை தீர்மானம் பற்றியும், அது இன்று கொண்டு வரப்பட்ட சூழ்நிலை பற்றியும் விக்னேஸ்வரன் அளித்துள்ள விளக்கத்தை மைத்திரியும், சந்திரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றே தோன்றுகிறது.

**இரண்டாம் காரணம்.**

இதை சொன்னவர் வேறு யாரும் அல்ல. அமைச்சர் ராஜித சேனாரத்ன. மஹிந்த பூச்சாண்டி காட்டுகிறாரே, தவிர இனி நேரடி அரசியலுக்கு வரமாட்டார். ஆகவே அவர் விட்டு சென்ற சிங்கள பௌத்த இடத்தை நிரப்ப இப்போது ரணில் முயற்சி செய்கிறார். இது நடக்கின்ற காரியமா? சிங்களவர்கள் ஒருபோதும் ரணிலை ஏற்றுக்கொள்ள போவது இல்லை. இவர் இந்த முயற்சி செய்து கொஞ்சம் எஞ்சி இருக்கும் சிறுபான்மை ஆதரவையும் இழக்க போகின்றார். சிங்கள பௌத்த இடம் காலி என்றால் அதை நிரப்ப சம்பிக்க, பொன்சேகா ஆகிய இருவரும் இருக்கின்றார்கள். எதிர்வரும் தேர்தலில் இவர்கள் இருவரும் கொழும்பில்தான் போட்டியிடபோகின்றார்கள். அப்போது ரணிலுக்கு இது தெரிய வரும்.



**மூன்றாம் காரணம்.**

இதுவும் சொல்லப்படுகிறது. தமிழர்களின் மீது ரணிலுக்கு ஒரு தீரா பகைமை உணர்வு மனதுக்கு உள்ளே ஏற்பட்டு விட்டது. 2005ஆம் வருட ஜனாதிபதி தேர்தலில், தனக்கு உரித்தான ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொள்வதை தடுத்த புலிகள் போட்ட தடை இன்று உலகறிந்த விடயம். அதேபோல் 2015ஆம் வருட ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிட கடைசி நிமிடம் வரை இருந்ததை, தடை போட்டு நிறுத்தியவர், சம்பந்தன் என்ற தமிழர். வேட்பாளராக மைத்திரியை போட்டியிட போட்ட திட்டத்துக்கு ரணிலை ஒப்புக்கொள்ள சந்திரிக்கா பயன்படுத்திய கடைசி ஆயுதம் தன் நண்பர் சம்பந்தன் என்பதும் இன்று உலகறிந்த விடயம்.

ஆகவே தனக்கு தொடர்ச்சியாக ஜனாதிபதி பதவியை பெறுவதற்கு தடையாக இருந்துவிட்ட தமிழர்களுக்கு எதிராக ரணிலுக்கு மனதுக்குள் ஒரு காரம் குடிகொண்டு விட்டது என அரசியல் ஆய்வுகளை நடத்தும் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் சொல்லுகிறார்.

வடக்குக்குச் செல்ல எனக்கு எவரது அனுமதியும் தேவையில்லை. யாழ்ப்பாணத்துக்கு போகும் நான் அவரை சந்திக்கமாட்டேன். அவர் மன்னிப்பு கேட்கும் வரை அவரை நான் சந்திக்க உடன்பட மாட்டேன். நான் பிரதமரான பின்னர் அவர் என்னைச் சந்திக்கவே இல்லை. விக்கி பொய் சொல்கிறார். அவர் ஒரு இனவாதி. அவரது தீர்மானம் ஒரு இனவாத தீர்மானம். ஐ.நா விசாரணை அறிக்கை வெளியீடு ஒத்தி வைக்கப்பட்டிருப்பது விக்கியின் கன்னத்தில் விழுந்த அறை என்றெல்லாம் சொல்லி சிறுபிள்ளை போல் ரணில் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

**கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் கூட்டணியாக பிரச்சாரம் செய்து ஜனாதிபதி தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம். இன்று மைத்திரி பதவியில் இருப்பதற்கு தமிழ் வாக்குகள் எவ்வளவு தூரம் காரணம் என்று தோற்றுப்போன மகிந்தவுக்கு தெரியும். மைத்திரி வெற்றி பெற்ற காரணத்தால்தான், இன்று ரணிலும் பிரதமர் பதவியில் இருக்கின்றார்.**

**இது தனக்கு நேர்ந்த தனிப்பட்ட அவமானம் அல்ல. தன்னை தெரிவு செய்துள்ள, தான் கேட்டுக்கொண்டபடி அன்னப்பறவை சின்னத்துக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவமானம் என்று முதல்வர் நினைப்பது தெரிகிறது.**

இவை பிரதமர் ரணில், முதல்வர் விக்னேஸ்வரன் தொடர்பில் கொட்டியுள்ள வார்த்தைகள். கொட்டிய வார்த்தைகளை இப்போது பொறுக்க முடியுமா? அதுவும் ஒரு நாட்டின் பிரதம மந்திரி பதவியில் இருப்பவர், தனது பதவிக்கான பண்பையும் மறந்துவிட்டு இப்படி பேசியுள்ளது பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில் ரணிலின் இந்த அடாத்தான மகா கோபம் ஏன் என்பதற்கு விடை தேட வேண்டியுள்ளது. ஒருவேளை அது கூட்டமைப்பில் உள்ள ரணிலின் நண்பர் சுமந்திரனுக்கு தெரிந்திருக்கலாம். தெரியாமலும் இருக்கலாம். ஆனால், சர்ச்சைக்குரிய ரணிலின் வடபகுதி விஜயத்தின் போது சுமந்திரன் நாட்டில் இருக்கவில்லை.

பொதுவாகவே ரணில், அறிவுள்ள தமிழர்கள், தமிழ் தலைவர்களாக தமிழ் மக்களுக்கு வழி காட்டுவதை விரும்புவதில்லை. இது எல்லாச் சிங்களத் தலைவர்களுக்கும் பொருந்தும். ஆனால், இப்போது ரணிலுக்கு இது ரொம்பவும் பொருந்துகிறது. தமிழர்கள் ஐக்கிய தேசிய கட்சியை அண்டி வாழவேண்டும் என்பதுவே ரணிலின் கொள்கை. ஆகவே தனது கட்சியை வடபகுதியில் வளர்க்க விரும்புகிறார். அது ஒன்றும் தப்பான காரியம் அல்ல. விஜயகலா மகேஸ்வரன், சுவாமிநாதன், ரோசி சேனநாயக்க போன்றோரை அழைத்துக்கொண்டு அவர் வடக்குக்கு விஜயம் செய்தது இந்த நோக்கில்தான் என்று அவதானிகள் சொல்கிறார்கள். இதிலும் தப்பில்லை.

ஆனால், அங்கே போகும் முன் ஒரு காரணத்தை ஏற்படுத்திக்கொண்டு வடக்கின் மக்களது ஆணையை பெற்ற முதல்வரை மிகவும் மோசமாக திட்டி விட்டு அங்கு போனது தப்பு. இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை வடபகுதியில் வளர்க்க முடியாது. இப்போதே ஐ.தே.க வடக்கில் குற்றுயிராக இருக்கின்றது. விஜயகலா மகேஸ்வரனும், சுவாமிநாதனும் இன்னொருமுறை ரணிலை வடக்குக்கு அழைத்துப் போனால் போதும், ஐ.தே.கவை குழி தோண்டி புதைத்து அங்கே சமாதி கட்டிவிடலாம் என்று ஒரு பிரபலமான வடமாகாணசபை உறுப்பினர்

(16ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அக்கினிக்குமரன்

# தடைசெய்யப்பட்ட தலாய்லாமா

திபெத்தின் ஆன்மீகத்தலைவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்ற செய்தி வெளிவந்தபோது, இலங்கை வாழ் பௌத்த மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது. திடீரென அவரின் வருகையை இலங்கை அரசாங்கம் அனுமதிக்க மறுத்துவிட்டது எனச் சில தகவல்கள் வெளிவந்தன. இது இலங்கையின் சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. ஆனால், அவர் வருகையை இலங்கை அனுமதிக்காமை தொடர்பாக சீனா பெரும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதாகவும் ஒரு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தலாய்லாமாவை இலங்கை வரவேற்பது சீனாவுக்குப் பிடிக்காது என்ற காரணத்தாலலேயே அவரின் வருகை தடை செய்யப்பட்டதாகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.



இலங்கையில் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எனப் பல மதங்களைச் சார்ந்தவர்களும் நிரந்தர குடிமக்களாக வாழ்ந்தபோதும் பௌத்த மத பீடங்கள், இலங்கை ஒரு பௌத்த நாடு என்றே சாதித்து வருகின்றன. இலங்கையின் ஆட்சியாளர்களும் அதற்கேற்ற வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர். 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டமும் வழிபாட்டுச் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டபோதிலும், பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கியுள்ளது.

ஒரு பௌத்த மதத்தினன்கூட இல்லாத இடங்களிலும் கூட புத்தர் சிலைகளையும், விகாரைகளையும் அமைப்பது பௌத்த தொல்பொருள் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறி தமிழ், முஸ்லிம், மக்களின் குடியிருப்புக்களை அபகரிப்பது உட்பட இலங்கையைப் பௌத்த மயப்படுத்தப் படும் நடவடிக்கைகள் ஆட்சியாளரின் உதவியுடன் இடம் பெற்று வருகின்றன.

இந்தியாவில் பௌத்தம், சமணம் முதலியன மேலோங்கி இருந்த காலப்பகுதியில் அதன் தாக்கம் காரணமாக இலங்கையின் சில பகுதிகளிலும் தமிழ் பௌத்தம் பரவியிருந்தமையை மணிமேகலை என்ற தமிழ் காப்பியம் மூலம் அறிய முடிகிறது. அதேபோன்று சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோ அடிகளும் கூட ஒரு சமணத் துறவியாவார். ஆனால் பல்லவர், சோழர் காலத்தில் ஏற்பட்ட இந்த மத எழுச்சி காரணமாக தென்னிந்தியா, வட இலங்கை ஆகிய இடங்களில் நிலவிய பௌத்தம் வழக்கொழிந்து போனது.

ஆனால் இன்றைய சிங்கள பௌத்த பேரினவாதத்திகள் வடக்குக் கிழக்கின் பல பகுதிகளில் சிங்கள பௌத்த இடங்கள் என உரிமை கொண்டாடி வருகின்றனர்.

**1949 ஆம் ஆண்டு சீனா விடுதலை பெற்ற போது திபெத் ஒரு தனி நாடாக விளங்கியது. அதன் தலைவராக மூத்த தலாய்லாமா விளங்கினார். பின்பு சீனா திபெத்தை உரிமைகோரி அதைக் கைப்பற்றியது. அதை அடுத்து தலாய்லாமா திபெத்தை விட்டு வெளியேறி இந்தியாவில் வசித்து வந்தார். எனினும் முன்னைய தலாய்லாமாவும் சரி இன்றைய தலாய் லாமாவும் சரி இன்று வரை தாமே சீனாவின் ஆட்சி யாளர்கள் என உரிமை கோரி வருகின்றனர்.**

ஒட்டுமொத்தத்தில் ஜாதிக ஹெல உறுமய, பொதுபலசேன போன்ற அமைப்புகள் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற வகையிலேயே உரிமை கொண்டாடி வருகின்றன.

தலாய்லாமா உலகப் பௌத்த மக்களின் ஆன்மீகத் தலைவராகப் போற்றப்படுபவர். அவரை வரவழைப்பதில் இலங்கை அரசு ஒரு உறுதியான நிலையை எடுக்கவுமில்லை. இலங்கையைப் பௌத்த நாடு என உரிமை கொண்டாடும் அமைப்புகள் அவரை வரவழைப்பதில் அக்கறை காட்டவுமில்லை. அது மட்டுமன்றி அவரின் வருகை தடைசெய்யப்பட்டதைப் பொருட்படுத்தவில்லை.

மியன்மாரின் பௌத்தர்களின் தீவிரவாதத் தலைவராக விளங்கியவர் விராது என்ற பௌத்த துறவி. இவர் மியான்மாரில் ரொஹின்சோ முஸ்லிம்கள் மீதான கொலைகள், அழிப்பு நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்துபவர். முஸ்லிம் பெண்களைப் பகிரங்க இடங்களில் வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துமளவுக்குக் கேவலமான மத வெறி கொண்டவர்.

அவர் இரகசியமான முறையில் இலங்கைக்கு வந்து போனதாகச் செய்திகள் வெளிவந்தன. அது மட்டுமன்றிப் பொதுபலசேனவின் பொதுச் செயலர் ஞானதேரர், மியன்மார் சென்று அவருடன் படமெடுத்துக் கொண்டதாகவும் செய்திகள் வந்தன.

வன்முறைகளில் நம்பிக்கை கொண்ட மதவெறி பிடித்த ஒருபௌத்தத்துறவி இலங்கைக்கு வந்துபோக முடியுமென்றால் அன்பு, கருணை அஹிம்சை என்பவற்றைக் கொள்கையாகக் கொண்ட தலாய்லாமா ஏன் இலங்கைக்கு வரமுடியாது என்ற கேள்வி எழுகின்றது.

1949 ஆம் ஆண்டு சீனா விடுதலை பெற்ற போது திபெத் ஒரு தனி நாடாக விளங்கியது. அதன் தலைவராக மூத்த தலாய்லாமா விளங்கினார். பின்பு சீனா திபெத்தை உரிமைகோரி அதைக் கைப்பற்றியது. அதை அடுத்து தலாய்லாமா திபெத்தை விட்டு வெளியேறி இந்தியாவில் வசித்து வந்தார். எனினும் முன்னைய தலாய்லாமாவும் சரி இன்றைய தலாய்லாமாவும் சரி இன்று வரை தாமே சீனாவின் ஆட்சியாளர்கள் என உரிமை கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் எந்த நாடும் தலாய் லாமாவுடன் உறவு வைத்திருப்பதைச் சீனா விரும்புவதில்லை. அதன் காரணமாகவே இலங்கை தலாய்லாமாவின் வருகையை ஏற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அது ராஜதந்திர உறவு தொடர்பான பிரச்சினை.

ஆனால், இலங்கையை ஒரு பௌத்த நாடு என உரிமை கொண்டாடும் பௌத்த அமைப்புகள் உலகப் பௌத்த ஆன்மீகத் தலைவரின் வருகை தடைசெய்யப்பட்டமைக்காக ஏன் கொதித்து எழுவில்லை? குறைந்தபட்சம் ஏன் ஒரு கண்டன அறிக்கைகூட வெளியிடப்படவில்லை?

இங்கு தான் பௌத்த மத அமைப்புகள், பௌத்த மதத்தின் மீதும் ஆன்மீகத் தலைமை தொடர்பாக கௌரவமும் வெளிப்படுகிறது. அதாவது பௌத்த மதத்தின் பேரால் வன்முறைகளிலும் கொடிய நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மியன்மாரின் விராது போன்றவர்களுக்குக் கொடுக்கும் பெறுமதியை, அன்பு, கருணை, அகிம்சை போன்றவற்றை உறுதியாகக் கடைப்பிடிக்கும் தலாய்லாமா போன்றவர்களுககு வழங்குவதில்லை.

எல்லாவற்றையும்விட ஒரு முக்கியமான காரணம் உண்டு. தலாய்லாமா சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத்தை விடுவிக்க சர்வதேச மட்டத்தில் போராடி வருபவர். அவரின் கோரிக்கைகளுக்குப் பல நாடுகள் ஆதரவு வழங்கிவருகின்றன.

பௌத்த பேரினவாதிகளுக்கு விடு தலை சுதந்திரம் என்பன வேப்பங்காய் போன்று கசப்பானது. தலாய்லாமாவுக்கு ஆதரவு வழங்கினால் அது தனிநாட்டுக் கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியதாக முடியும். எனவே தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை எதிர்ப்பதை நியாயப்படுத்திவிடமுடியாது. அதிலிருந்த நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள முடியும். இலங்கையில் பௌத்த அமைப்புகள் புத்தரின் புனிதமான கொள்கைகளையே பின்பற்றும் பௌத்த மதத்தலைவர் களையே மதிப்பதில்லை. ஏனைய இனங்கள் மீதும் மதங்கள் மீதும் ஒடுக்குமுறையைப் பிரயோகிக்க மதத்தை ஒரு ஆயுதமாகவே கையாண்டு வருகின்றனர். விராது போன்ற மதவெறிகொண்ட வன்முறையாளர்களுடன் நல்லுறவைப் பேணும் இவர்கள், தலாய்லாமா போன்ற ஆன்மீகத் தலைவரின் வருகை தொடர்பாக அக்கறை காட்டாமல் இருப்பதிலிருந்தே நாம் இதைப் புரிந்துகொள்ள முடியும்.

எப்படியிருப்பினும் இலங்கையி லுள்ள பல பௌத்த மத அமைப்புகள், மதத்தையும், மதக்கொள்கைகளையும் விட மதத்தின் பேரால் ஏனைய மதங்கள் மீது ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதையே கொள்கையாகக் கொண்டுள்ளன என்பதே உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# வடக்கின் வளத்தைச் சுரண்டாதீர்

வடக்கு வாழ் மக்களின் பிரதான தொழில்களாக, காலம் காலமாக முன்னிலை வகிப்பவை விவசாயம், கடற்றொழில், பனம்கைத்தொழில் ஆகிய மூன்றும் ஆகும்.

வெளியார் ஆளுகைக்கு ஆட்படும் வரையும், இயற்கை தந்த அந்த அருந்தொழில் வளங்களே எங்கள் முன்னோர்களை எவரிடமும் கை ஏந்தாமல் சுபீட்சத்துடன் வாழவைத்தது. பண்டமாற்றுப் பரிமாற்றம் அவர்களின் தேவைகளைப் போதும் போதும் என்று நிறைவேற்றின.

ஆனால், பிறநாட்டார் ஆட்சி இந்த நாட்டில் மாறி மாறிக் கால்பதித்த காலவர்த்மானங்களின் போது, வாழ்க்கை நிலை ஒவ்வாத வெவ்வேறு வடிவங்கள் எடுத்தன.

அண்மைக்காலத்தில், தமிழ் மக்களின் உரிமைப்போர் மேல் எழுந்ததன் பின்னர், தமிழர் தேசத்தின், வளங்களைச் சுரண்டுவதில் தென்னிலங்கையர், தட்டிக்கேட்க எவரும் இல்லை என்றால் தம்பி தண்டப் பிரசண்டம் என்ற நிலை உருவாக்கப்பட்டது; இப்போது நெடிது உயர்கிறது அது.

போர்க் காலத்தில், வடக்கு மக்கள் எல்லோருமே பலப் பல வகைகளில் பாதிக்கப்பட்டனர். வாழ்வியல் ரீதியாக வதைக்கப்பட்டனர்.

அந்த நிலையில் புதிய மைத்திரிபால அரசு ஆடசிக்கு வந்து, நான்கு மாதங்கள் கடந்தோடிச் சென்றபோதிலும், ஒளிமயமான மாற்றங்களைத் தமிழர்களால் காண இயலவில்லை.

போர் முடிவுற்று ஆறு வருடங்கள், அந்தா இந்தா என்று கடந்தேறிச் சென்றுவிட்டது. அதுவும் இங்கு குறிப்பிடப் பட வேண்டிய பிரதான அம்சமாகும்.

இந்திய - தமிழ் - மீனவர்களின் அத்துமீறிய தொழிற் செயற்பாடுகளால், வடக்கின் கடற்றொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில் பாதிப்புறுகிறார்கள். இதனை எந்த வகையிலும் மறுத்துரைக்க முடியாது.

அதேவரிசையில், தென்னிலங்கை மீனவர்களும், வடக்குக் கடற்றொழிலாளரின் தொழிலைப் பெரிய அளவில் பாதிக்கும் அளவுக்கு நாட்டாண்மைத் தனத்துடன் - தம்மை எவரும் தட்டிக் கேட்க முடியாது என்ற அகங்காரத்துடன் - அத்து மீறித் தொழில் செய்கிறார்கள்.


ஆனால், அத்தகையோரை, தாம் துரத்தித் துரத்திக் கைதுசெய்வதாக அரச அதிகாரிகள் 'ஜல்தா' போடுகின்றனர்!

மொத்தத்தில், கடல்வளம், மீன்வளம் கொண்ட வடக்கில் தொழில் செய்யும் இந்தப் பிரதேச மீன்பிடித் தொழிலாளர்கள், மன நிறைவுடன் தமது ஜீவனோபாயத்துக்குத் தொழில் புரிய இயலாத நிலைமை பல முனைகளிலும் உயர்ந்து எழுந்து, முனைப்புப் பெறுகின்றது.

இதனால் பாதிப்புறுவது கடற்றொழில் புரிவோர் மட்டுமல்லர், வடக்கின் வளமும் திட்டமிட்டுச் சுரண்டப்படுகிறது. இது ஆதாரபூர்வமானது.

மொத்தத்தில், புதிய கொழும்பு அரசும், அதன் அதிகாரிகளும் வடக்கின் வளத்தைச் சுரண்டுவது அப்பட்டமாகத் தெரிகிறது; மேலெழுந்து காட்டுகிறது.

இதனைத் தடுத்து நிறுத்தும் முழுப் பொறுப்பில், வடக்கு மாகாண அரசுக்கும், கொழும்பு அரசுக்கும் சம பங்கு உண்டு. இருதரப்பாரும் நீதி நிலை நின்று மன தார்ந்து செயற்படுவரா...? எதிர்பார்க்கலாமா??....



# பத்தொன்பதாவது திருத்தம் நிறைவேறுமா... என்ன...?

- கோமேஸ்

இலங்கையில் நீண்ட காலமாக ஜனநாயக ஆட்சி என்ற போர்வையில் இடம்பெற்று வந்த ஜனநாயகத்துக்கு விரோதமான ஆட்சி முடிவுக்கு வந்து மூன்று மாதங்கள் முழுமையாக முடிவடையாத நிலையில், தேசிய அரசு என்ற போர்வையில் உதயமாகிய புதிய அரசினால் நாடாளுமன்றில் முதன் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை 21 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டமை, மைத்திரி தலைமையிலான அரசுக்கு கிடைத்த முதல் அடியாகவே காணப்படுகிறது.

திறைசேரி உண்டியலூடாக அரசு பெற்றுக்கொள்ளக் கூடிய கடன் தொகையை, 400 மில்லியன் ரூபாவால் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் வகையில் அமைந்த இந்தப் பிரேரணைக்கு, ஆதரவாக 31 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதையடுத்து, எதிர்க்கட்சி எம்.பிக்கள் மேசைகளைத் தட்டி, கூச்சலிட்டனர் சபையில். இது உண்மையில் எதிர் கட்சி இன்னும் பலத்துடனே இருப்பதைக் காட்டுவது மட்டுமின்றி தங்களுடைய ஆதரவின்றி மைத்திரி அரசால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதையும் வெளிப்படையாக எடுத்துக் காட்டியது.

புதிய அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரேரணையைச் சமர்ப்பித்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சிரேஷ்ட அமைச்சர்கள் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை! அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜோன் செனவிரட்ன ஆகியோரும் பிரசன்னமாகி இருக்கவில்லை. பிரேரணைக்கு எதிராக ஜே.வி.பியும் வாக்களித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

அதேவேளை, அண்மையில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 26 எம்.பிக்களில், அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க மற்றும் விஜித் விஜிதமுனி சொய்ஸா ஆகிய இருவர் மட்டுமே பிரேரணைக்கு

**இலங்கையில் நீண்ட காலமாக ஜனநாயக ஆட்சி என்ற போர்வையில் இடம்பெற்று வந்த ஜனநாயகத்துக்கு விரோதமான ஆட்சி, முடிவுக்கு வந்து மூன்று மாதங்கள் முழுமையாக முடிவடையாத நிலையில், தேசிய அரசு என்ற போர்வையில் உதயமாகிய புதிய அரசு நாடாளுமன்றில் முதன் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை 21 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. மைத்திரி தலைமையிலான அரசுக்கு கிடைத்த முதல் அடியாகவே இது காணப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக வாக்களித்து புதிய அரசுக்கு விசுவாசத்தை காட்டினர். ஏனைய எவரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை, அதனால், இது தான் தேசிய அரசா? என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.



ஆட்சிப் பொறுப்பை ஏற்று குறுகிய காலப்பகுதியில் சமர்ப்பித்த பிரேரனை ஒன்று தோற்கடிக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள 19 ஆவது திருத்தமும், தோற்கடிக்கப்பட்டு விடுமோஎன்ற அச்சம் ஆளும் கூட்டணியைப் பற்றிக் கொள்ளத் தொடங்கிவிட்டது.


1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினை, ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு தலைவர்களும் நிறைவேற்று அதிகார முறைமையினை நீக்குவதாக மக்களுக்கு உறுதிமொழி வாங்குவார்கள். ஆனால் அந்த வாக்குறுதிகள் எல்லாம் ஓடும் தண்ணீரில் எழுதிய வாக்குறுதிகள் போல, ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்கும் வரை அதை நீக்க முயற்சிகள் எடுக்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை. அது போலவே மைத்திரி யுகமும் சிலவேளைகளில் முடிவடையக் கூடிய சூழ்நிலையே தோன்றியுள்ளது.

உண்மையில் அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்பட்டதற்கு எதிர்க்கூட்டணியில் ஏற்பட்ட பிளவே முக்கிய காரண்மாகவே காணப்படுகிறது.

இதனை எதிர்க்கட்சி கூட்டணி ஏற்றும் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியல்ல, திறைசேரி உண்டியல் விநியோகம் செய்வது தொடர்பிலான நாடாளுமன்ற யோசனை தோற்கடிக்கப்பட்டமைக்கு ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்ட பிளவே காரணம் என வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அதுமட்டுமின்றி ஜனாதிபதி மைத்திரியும் ஏற்றுக் கொண்டுள்ளது மட்டுமல்லாது அடுத்து சமர்ப்பிக்கப்படவுள்ள சீர்திருத்தம் வெற்றி பெறுமா? என்ற கேள்வியை பிரதமரிடமே வின்ாவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உண்மையில், பொதுக் கூட்டணியானது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைத் தக்க வைத்துக் கொள்வதில் வெற்றி பெறவில்லை.அண்மையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைத் தக்கவைத்துக் கொள்ள மைத்திரி அரசு மஹிந்த கூட்டணியில் இருந்தவர்களுக்கு பல அமைச்சுப் பதவிகளை கொடுத்து தமது பக்கம் இழுத்தது. ஆனால் அதுவும் தற்போது வெற்றிபெறவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வாக்களிக்கவில்லை. இவ்வாறன ஒரு நிலையில் எதிர்வரும் 20ஆம் திகதி 19வது சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு



விடப்படவுள்ளது. இந்தச் சட்டமூலமும் வெற்றி பெறுமா?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவது,

**அமைச்சரவையின் தலைவராகப் பிரதமர் செயற்படுவது, அமைச்சர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை பிரதமருக்கு வழங்குவது போன்ற சில அம்சங்களுக்கு, நாடாளுமன்ற ஒப்புதலுக்கு அப்பாற்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பும் தேவை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

தேர்தல் நடைமுறையில் மாறுதல் கொண்டுவருவது உட்பட பல விடயங்களை உள்ளடக்கிய அரசியல் சாசனத்தின் 19ஆவது திருத்தத்தை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் சமர்பித்தது.

அமைச்சரவையின் தலைவராகப் பிரதமர் செயற்படுவது, அமைச்சர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை பிரதமருக்கு வழங்குவது போன்ற சில அம்சங்களுக்கு, நாடாளுமன்ற ஒப்புதலுக்கு அப்பாற்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பும் தேவை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உண்மையில் இது வரவேற்கப்பட வேண்டிய விடயமே, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டிராத அரசு குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது நிச்சயமாக தோல்வியைத் தழுவும் என்று எதிர்பார்க்கலாம். எனவே, மக்களின் ஆணையினைப் பெற்றுக் கொண்டால் அரசு தப்பித்துக் கொள்ளும் ஆனால்பொதுவாக்கெடுப்புக்கு விடப்படுமா? என்ற சந்தேகம் மறுபுறம் எழுகின்றது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமான ரணில் விக்கிரமசிங்க, உயர் நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்புத் தேவை எனக் கூறியுள்ள பிரிவுகளை, அந்தச் சட்டத் திருத்தத்திலிருந்து நீக்கிவிட்டு, இதர பிரிவுகளை நிறைவேற்றலாம் என அறிவித்துள்ளார். மைத்திரி தலைமையிலான அரசுக்கு சற்று சவாலான விடயமாகவே இது காணப்படுகிறது.

ஏற்கனவே திறைசேரி உண்டியல் விநியோகம் செய்வது தொடர்பிலான நாடாளுமன்ற யோசனை தோற்கடிக்கப்பட்டுள்ளமை காரணமாக வைத்து ஆட்சியினைக் கைப்பற்றிக் கொள்ள எதிர்க் கட்சிகள் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில், மீண்டும் ஒரு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோல்வியடையுமானால், முன்னைய ஜனாதிபதி போன்றே மைத்திரி நாட்டை ஆழ தகுதியற்ற ஆளுமையற்ற தலைவர் ஒருவர் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்டுளார் என்ற கோஷம் எழும். மீண்டும் மஹிந்த யுகம் ஒன்று ஆரம்பமாவற்கு காரணமாக அமையக் கூடிய சூழ்நிலை தென்படுகிறது.

உண்மையினைச் சொல்வதானால், மைத்திரி அரசு நெருக்கடியான சூழ்நிலையில் சிக்கித் தவித்துக் கொண்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் சில சரத்துக்கள் நீங்கப்பட்டால் பிரதமருக்கு சில அதிகாரங்கள் கிடைத்துவிடும்.எனவே முக்கிய சில முடிவுகளை பிரதமரே தீர்மானிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே பொதுத்



தேர்தல் ஒன்றை இரண்டு பிரதான கட்சிகளும் சந்திக்க இருக்கின்றன. சுதந்திரக் கட்சியின் சார்பாக மஹிந்த, சந்திரிகா, தினேஸ் குணவர்த்தன,நிமால் சிறிபாலடி சில்வா என பட்டியல் நீண்டு செல்கிறது. இவர்களில் யார் போட்டியிடப் போகின்றார்கள் என்பது தொடர்பாக சுதந்திரக் கட்சிக்குள்ளே தற்போது கசபுசா தோன்றியுள்ளதாம். அது ஒருபுறமிருக்க ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் தற்போது வரைக்கும் ரணிலின் பெயரே உச்சரிக்கப்படுகிறது. தேர்தல் நெருங்கும் போது தான் அடுத்த கட்டப் பிரச்சினையை ரணிலுடைய கட்சி சந்திக்கப் போகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் இவர்களில் பிரதமர் என்ற ஆட்சிக் கட்டிலை யார் அலங்கரிக்க போகிறார்கள் என்ற போட்டி இன்னும் சில நாள்களில் இடம்பெறப்போகின்றது. அதற்கான ஒத்திகை நடவடிக்கைகளில் பிரதான கட்சிகள் ஈடுபடத் தொடங்கி விட்டன. எதிர்வரும் 20ஆம் திகதி 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது கலைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது, அதில் வெற்றி கொள்வது என்பது ஜனாதிபதி தேர்தலில் மைத்திரி வெற்றி பெற்றதைப் போலவே, சவால் மிகுந்த ஒன்றாகவே இருக்கப் போகிறது. ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- லயனல் குருகே

# கூட்டணி அரசியலின் புதிய பாடங்கள்

அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தை அங்கீகரிப்பது பற்றி ஏற்பட்டுள்ள விவாதங்கள் அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தும் நிலைமையை உருவாக்கி உள்ளன. இந்த நெருக்கடியை மிகக் கவனமாக முகாமைத்துவம் செய்ய வேண்டி உள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களை அறியாமல், சட்டத்தரணிகளோ அல்லது உயர்கல்வி கற்ற தரப்பினரோ அரசியலமைப்பை உருவாக்குதலும், தமது நம்பிக்கைகளை அவ்வாறே நிலைநிறுத்துவதன் காரணமாகவும், பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றி அமைப்பதற்கு முழுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு தரப்பினரும் இருக்கத்தான் செய்கின்றனர். இந்தத் தரப்பினரின் கருத்துக்களுடனும், முரண்பாடுகளுடனும் பின்னிப் பிணையும்போது அரசியல் முறுகல் நிலை உருவாவதைத் தவிர்க்க முடியாது.



### செய்ய வேண்டியது என்ன?

கூட்டணி அரசியல் பற்றி புதிய அனுபவங்களைப் பெறும் தருணமே இது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான அரசியல் கட்சிகளுக்கு இதுபற்றிய ஆழமான விளக்கம் இல்லையெனத் தோன்றுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக தமது கட்சியின் அடிமட்டம் முதல் மேல் மட்டம்வரை உரிய அறிவுறுத்தல்களைச் செய்யவில்லை. ஏனைய அரசியல் கட்சிகளைப் போலவே ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளும் உட்கட்சி ஜனநாயகம் நிலவாமையே இதற்குப் பிரதான காரணமாகும். இது விடயமாக தலைமைத்துவத்தின் கருத்துக்களுக்கும் நடைமுறைக்கும் இடையே பாரிய இடைவெளி இருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது தொடர்பாக செயற்படும் முறையைப் பற்றியும் மகிழ்ச்சியடைய முடியாது. கட்சியின் தலைமைப் பதவி தனக்குக் கிடைத்த பின்னர் தனது கட்சியின் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பிரதிநிதிகளை அழைத்து கூட்டணி அரசியலைப் பற்றியும், தனது நிகழ்ச்சித்திட்டத்தைப் பற்றியும் பரந்துபட்ட விளக்கத்தை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அது இடம்பெறவில்லை. இன்று சமரச அரசியலே நாட்டிற்குத் தேவைப்படுகிறது. சுதந்திரத்தின் பின்னர் இன்றுவரை தீர்க்கப்படாத தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை மேற்கொள்வதற்கும் அரசியல் கட்சிகளின் குறுகிய மனப்பான்மைகளில் இருந்து விடுபட வேண்டும்.

### 100 நாள் வேலைத்திட்டமும் நடைமுறையும்

100 நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே மைத்திரிபால சிறிசேன பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் பல்வேறு உடன்படிக்கைகளை மேற் கொண்டுள்ளார். இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்சினை பற்றி அன்று ஆழமாக சிந்தித்து இருக்க முடியாது. 100 நாள் வேலைத் திட்டம் ஒரே இடத்தில் தேங்கியுள்ளமையால் வெடித்துச் சிதறக்கூடிய ஓர் அழுத்தமும் பல சிக்கல்களும் உருவாகி உள்ளன. எனவே, உடன்படிக்கைகள் மூலம் இணக்கப்பாட்டுக்கு வந்த அரசியல் கட்சிகள், உடனடியாக புதிய இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். மக்களுக்கு வழங்க வேண்டிய உறுதிமொழிகள் தொடர்பாக மீண்டும் ஆழமான கலந்துரையாடலை ஏற்படுத்தி நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களுக்கு வரவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இணக்கப்பாட்டிற்கு வந்த தரப்பினர் பரஸ்பரம் நம்பிக்கை இழந்து ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் நிலைக்குச் செல்ல இடமுண்டு. அது தற்போது படிப்படியாக இடம்பெற்று வருகிறது.

### இணக்கப்பாடுகள் நீடித்து நிலைக்கக் கூடியவையா?

ஓர் உடன்படிக்கை அல்லது இணக்கப்பாடு என்பது கருங்கல்லில் செதுக்கிய சிற்பம்போல மாற்றமடையாத ஒன்றல்ல. மனிதர்களின் நன்மைக்காக, மனிதர்களின் சார்பில் உருவாக்கப்படும் இத்தகைய இணக்கப்பாடுகள் காலத்தின் தேவை கருதி சீர்திருத்தம் செய்வதில் தவறேதுமில்லை. ஏனெனில், குறிக்கோள் நல்ல நோக்கம் கொண்டதாக அமைந்துள்ளபடியால் இது சாத்தியம். இவைபற்றி மனிதாபிமானத்துடன் மிகக் கவனமாகவும், பகுத்தறிவோடும் பிரச்சினையை அணுகவேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளையும், பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் தேசிய சபை உடனடியாக கூட்டப்படுதல் அத்தியாவசியமான காரணியாகும். ஜனாதிபதியை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு தீர்மானகரமான நடவடிக்கைகளை மேற்கொண்ட பல்வேறு தரப்பினருடனும் உடனடியாக கலந்துரையாடலை ஆரம்பிப்பது அவரது பொறுப்பாகும். அதற்குப் பதிலாக 19ஆவது திருத்தத்தை அவசரஅவசரமாக அங்கீகரிப்பதற்கு தீர்மானித்தால் 17ஆவது திருத்தத்திற்கு நேர்ந்த கதியே அதற்கும் ஏற்பட இடமுண்டு. தனது கட்சியின் பிரதேச தலைவர்களின் அதிகப்படியானோரை வெற்றிகொள்ளும் ஆற்றல் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கு இருந்து வருகிறது. பிரதேச மட்டத்தில் கணிசமான அளவினர் முன்னைநாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சார்பாக நடந்துகொள்வதைக் காணமுடிகிறது. முன்னைநாள் ஜனாதிபதியின் ஒத்துழைப்பை இத்தருணத்தில் பெறமுயல்வது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், சமரச அரசியலில் சகல தரப்பினருடைய இணக்கப்பாட்டையும் பெறவேண்டி உள்ளது. முன்னைநாள் ஜனாதிபதிகளாகிய மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோரின் கூற்றுக்களும் அவர்களுடைய நடவடிக்கைகளின் ஒத்துழைப்பும் அரசியலை பாரதூரமாக பலவீனப்படுத்தி உள்ளது. மூத்த தலைவர்கள் என்ற வகையில் இத்தருணத்தில் அவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு இது சந்தர்ப்பம் அல்ல. தற்செயலாக 19ஆவது திருத்தம் தொடர்பாக இணக்கப்பாடு காணமுடியாது. துரிதமாக பொதுத் தேர்தலுக்குச் சென்றால், அதன் பின்னர் அமைக்கப்படும் அரசு எத்தகையது என்பது பற்றி இத்தருணத்தில் கலந்துரையாட வேண்டும்.

> **அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துக் களை அறியாமல், சட்டத்தரணிகளோ அல்லது உயர்கல்வி கற்ற தரப்பினரோ அரசியலமைப்பை உருவாக்குதலும், தமது நம்பிக்கைகளை அவ்வாறே நிலைநிறுத்துவதன் காரணமாகவும், பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.**

துரதிர்ஷ்டவசமாக அவசரமான ஒரு பொதுத் தேர்தலை எதிர்நோக்க நிர்ப்பந்திக்கப்பட்டால் அதற்கான மாற்றுத் திட்டங்களும் எமக்கு இருத்தல் வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கும், ஜனநாயகத்தை மேலும் சிறப்பாக உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான வழிவகைகளை நாம் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

### தேசிய ஐக்கியம்

ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் திடீர் பொதுத்தேர்தலை நோக்கிச் செல்வது அவர்களுடைய உபாய மார்க்கமாகலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமது சக்தியை மேம்படுத்தி தாமதமாகித் தேர்தலை எதிர்நோக்குவதாகும். இது எப்படி இருப்பினும் புதிதாக தெரிவு செய்யப்படும் அரசின் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டுமென அரசியல் கட்சிகளிடையே ஒரு கலந்துரையாடல் அவசியமாகும். இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்போகும் தேசிய அரசின் இயல்பு எத்தகையது. பிரதான அரசியல் கட்சிகளைப் போலவே ஏனைய சகல எண்ணிக்கையில் சிறுபான்மையான அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களையும் மும்மொழிவுகளையும் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த அரசின் கட்டமைப்பையும், வேலைத்திட்டத்தையும் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள், தேசிய ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்குவதே மிக முக்கியமாகும்.

இத்தருணத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளும், அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் பற்றி ஆட்சியாளர்களுக்கு அவ்வளவு விளக்கம் இல்லைபோல் தோன்றுகிறது. வாழ்க்கைச் சுமையைக் குறைப்பது பற்றிய ஜனரஞ்சகமான பேச்சுக்களும், அதுபற்றி பொதுமக்களின் கருத்துக்களும் முரண்பட்டவை. அரசியலமைப்புத் திருத்தம்பற்றி என்னதான் பேசினாலும் சாதாரண மக்களுக்கு பொருளாதார நன்மை கிடைப்பதற்கான வழிவகைகள் கிட்டவில்லை. சிங்கள, இந்து புத்தாண்டுக் காலத்தில் இந்நிலைமை மேலும் மோசமடைந்து எதிர்ப்பலை உருவாக இடமுண்டு. இது இன்றைய அரசின் தேர்தல் அடிப்படையையே ஆட்டம் காணச் செய்துள்ளது.

### நல்லாட்சியின் சவால்கள்

தற்போதைய அரசின் பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளும், ஐக்கிய தேசிய கட்சிக்குப் பாதகமான நிலைமையை ஏற்படுத்துகிறது. மத்திய வங்கியின் ஆளுநரை பிரதமர் தான்தோன்றித்தனமாக நியமித்தார். அரச சேவையின் முக்கிய பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கும்போது பிரதமரோ அல்லது அமைச்சர்களோ தீர்மானிப்பதற்குப் பதிலாக ஒரு குறித்துரைக்கப்பட்ட வழிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டுச் சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நியமனங்களை செய்வதற்கான தாமதம் மேற்படி சேவைகளின் வினைத்திறன்மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமரின் வட மாகாண விஜயம் சாதகமான பாதகமான பெறுபேறுகளைக் கொண்டுவந்துள்ளது. சகல பாடசாலை அதிபர்களையும் அரச உத்தியோகத்தர்களையும் விழித்து உரைநிகழ்த்தும் சந்தர்ப்பத்தைப் பிரதமர் பெற்றுக்கொண்டார். மாகாண சபை பிரதிநிதிகளும், உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பிரதிநிதிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. வட மாகாணத்தின் அதிகப்படியான பாடசாலைகள் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டின் கீழேயே வருகின்றன. கல்விப் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதாயின் அங்குள்ள மாகாண அரசியல் தலைமைத்துவத்தை அல்லது மாகாண கல்வி அமைச்சைச் சார்ந்த செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடாமல் பிரதமர் ஏனையோரை அழைத்து கலந்தாலோசித்துள்ளார். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு உடன்பாட்டைக் காட்டிய ஒரு அரசியல்வாதி என்ற வகையில் நடைமுறையில் அதிகாரத்தை பகிர்வதற்குப் பதிலாக கொழும்பை மையப்படுத்தி நிர்வாகத்தை நடத்தும் ஒரு வழிமுறையையே பிரதமர் அனுசரித்துள்ளார். இணக்க அரசியலில், எண்ணிக்கையில் சிறுபான்மையான அரசியல் கட்சிகளின் பங்களிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது கட்டாயமான நிபந்தனையாகும். எனவே, புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் சவால் எமக்கு முன்னால் உள்ளது. இந்த சகல நிலைமைகளின் கீழ் அரசியல் கட்சிகள் தமது பயணப்பாதை சரியா என மீளாய்வு செய்து சமரசத்திற்கு வர தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அறிஞர்களையும், ஊடகங்களையும், அனைத்துப் பிரஜைகளையும் இக்கலந்துரையாடலின்போது பங்குகொள்ளச் செய்வதே அரசின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரை வாழவைத்த லீ குவான் யூ



'சிங்கப்பூரை வாழ வைக்க வேண்டிய கடமை யாருக்கும் இல்லை' என்று சொன்னவர் சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ. சிங்கப்பூர் என்கிற ஒரு ஊர் சிட்டுக்குருவியைப் போன்றது. சிட்டுக்குருவி பறப்பதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லாத பறவை. இருந்தாலும் பறக்கிறது. அது போல சிவப்புப் புள்ளி ( ரெட் டொட் ) என்று அழைக்கப்படும் சிங்கப்பூரும் தனி நாடாகத் திகழ எந்தத் தகுதியும் இல்லை. இருந்தாலும் எல்லா முரண்களையும் தடைகளையும் மீறிச் சிட்டுக் குருவியைப் போல உலக வானில் சிறந்து விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் லீ குவான் யூவே.

சிங்கப்பூர் தனி நாடாக வாழ வேண்டும் என்றால் அது தன்னிறைவு பெற்றதாக இருக்க வேண்டும். ஆனால் காற்று ஒன்றைத் தவிர இயற்கை வளங்கள் எதுவும் இல்லை, தண்ணீர் உட்பட. ஆனால் இப்படி இருப்பினும் இன்று உலகின் தலை சிறந்த, ஊழலற்ற, மக்களுக்குச் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளித்துள்ள நாடாகச சிங்கப்பூர் திகழ்கிறது என்றால் அது ஹாரி என்று சிறு வயதில் அழைக்கப்பட்ட லீ குவான் யூ என்கிற தன்னிகரில்லாத் தலைவனின் முயற்சியாலேயே என்று கூறலாம்.

காலனி ஆதிக்கத்தின் பிடியில் இருந்து மலேசியா வெளியேறிய போது சிங்கப்பூரும் அத்துடன் இணைந்திருந்தது. ஆனால் தன் மக்களிடையே மத ரீதியாக வேறுபடுத்திப் பார்த்த மலேசியாவிலிருந்து 1965இல் பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டது. நிலையில்லாத அந்தக் காலகட்டத்தில் துணிந்து முடிவெடுத்து சிங்கப்பூர் என்னும் ஒரு தனி நாட்டை உருவாக்கினார் திரு லீ. ஆனால் சென்னையைவிடச் சிறிய நில அளவேயுள்ள தீவான சிங்கப்பூர் தனி நாடாக இயங்க மலேசியாவும், இந்தோனேசியாவும் அனுமதிக்குமா என்கிற கேள்வி அனைவர் மனதிலும் இருந்து வந்தது.

அங்குதான் லீயின் மதி நுட்பமும் சாதுர்யமும் மிளிர்கின்றன. இங்கிலாந்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார் லீ. இங்கிலாந்தின் இராணுவம் கணிசமான ஆண்டுகள் சிங்கப்பூரில் நிறுத்தப்படும் என்பதே அந்த யுக்தி. அந்த நேரத்தில் தனது இராணுவ பலத்தைக் கூட்டவும், பொருளியலில் ஒரு ஸ்திரத்தன்மையை அடையவும் அது வழி வகுக்கும் என்கிற இராஜ தந்திர உபாயம் லீயால் முன்வைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் அதனை 'மாஸ்டர் ஸ்ட்ரோக்' என்று அழைக்கலாம்.

1965இல் தனி நாடான சிங்கப்பூரின் முதல் சட்டம் அரசுப்பணியாளர் நேர்மைச் சட்டம். லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் மிகக் கடுமையான குற்றங்கள் என்று அறிவிக்கப்பட்டன. லீயின் நெருங்கிய நண்பர்கள் கூட இந்தச் சட்டத்தில் இருந்து தப்ப முடியவில்லை. இன்று லஞ்சம் என்ற பேச்சே இல்லாமல் இருக்கிறது என்றால் அதற்கு சிங்கப்பூர் வாசிகள் லீயிற்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

தனி நாடானவுடன் மக்கள் உழைப்பு அதிகமாகத் தேவைப்பட்டதால், அரசு அலுவலகங்கள் அனைத்தையும் குளிர் வசதியுடன் அமைத்தார் லீ. மழையும் வெயிலும் அதிகம் உள்ள சிங்கப்பூரில் மக்கள் அலுவலகங்களில் அதிக நேரம் இருப்பதை விரும்பி அதிகம் உழைத்தனர். நாடு வளர்ந்தது.

அந்தக் காலகட்டத்தில் எந்த நாடும் செய்யத் துணியாத ஒரு செயலை லீ செய்தார். இஸ்ரேலின் ஆரம்ப நாள்களில் அந்த நாட்டை எந்த உலக நாடும் அங்கீகரிக்காத நேரத்தில், துணிந்து அதனை அங்கீகரித்து அந்த நாட்டுடன் நாலுறவை ஏற்படுத்தினார். அதனால் சிங்கப்பூர் அடைந்த நன்மைகள் ஏராளம். நீர் வள மேலாண்மை, இராணுவ உடன்பாடுகள் முதலியன இந்த இரு நாடுகளுக்குள்ளும் ஏற்பட்டன.

பல்லின மக்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டிய நாடான சிங்கப்பூரில் நேர்மையான மதச்சார்பின்மை திகழக் காரணம் லீ. சீன, மலாய், தமிழ் பேசும் மக்கள் வாழும் நிலத்தில், இவற்றுடன் ஆங்கிலத்தையும் உட்புகுத்தி நான்கு மொழிகளையும் தேசிய மொழிகளாக்கினார் லீ. அரசின் அனைத்துச் செயல்பாடுகளும் ஆங்கிலத்தில் செய்யப்பட ஆவன செய்தார்.

விடுதலை அடைந்த சில ஆண்டுகளில் சீனர்களுக்கும் மலாய் இனத்தவர்களுக்கும் இடையே ஒரு கலவரம் ஏற்பட்டது. மக்களிடம் ஒற்றுமை ஏற்படுத்த கூட்டு இராணுவப் பயிற்சியே சரியான வழி என்று கண்டறிந்து 18 வயது நிரம்பிய அனைத்துச் சிங்கப்பூர் ஆணும் இரண்டாண்டுகள் கட்டாய இராணுவ சேவை ஆற்ற வேண்டும் என்னும் உயரிய திட்டம் கொண்டு வந்தார் திரு.லீ.

தகரக் கொட்டகைகளிலும் பன்றிகள் உலவும் கழனிகளிலும் இருந்த பல அடித்தட்டு சிங்கப்பூர் மக்கள் இன்று வானளாவிய கட்டடங்களில் வாழ்கின்றனர். அவர்களில் 97% பேர் வீட்டுரிமையாளர்களாக இருப்பதற்கு லீயின் வீடமைப்புக் கழக அணுகுமுறையே காரணம்.

கட்டாய சேம நிதி என்னும் திட்டம் மூலம் மக்களைச் சேமிக்கத் தூண்டி நாட்டின் வீட்டு வசதியைப் பெருக்கினார் லீ. சேம நல நிதியின் மூலம் அரசின் பொருளியல் உயர்ந்தது. மக்களின் செல்வமும் உயர்ந்தது.

சர்வதேச அளவில் சீனாவின் ஆளுமையைச் சமன் செய்ய இந்தியா என்கிற யானையின் பலமும் தேவை என்று உணர்ந்து, இந்தியாவை ஆசியான் அமைப்புக்குள் கொண்டு வர முயன்று வெற்றி கண்டார். சீனாவின் வளர்ச்சியை 40 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து அத்துடன் நல்லுறவை வளர்த்தார். ஷாங்காய் என்கிற ஆசியாவின் மன்ஹாட்டன் நகரம் உருவாக அந்த நாளைய சீனத் தலைவர் டெங் சீ பிங்கிற்கு உதவினார். அந்த நன்றியைச் சீனா இன்றும் நினைவில் கொண்டுள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்காவுடனான நல்லுறவை மேம்படுத்தப் பெரு முயற்சி செய்து அமெரிக்க நிறுவனங்கள் சிங்கப்பூரில் காலூன்றவும், அமெரிக்காவுடனான இராணுவ ஒப்பந்தங்கள் ஏற்படவும் காரணமானார். அமெரிக்க சீன நல்லுறவு ஏற்படவும் அவ்விரு நாடுகளுக்கிடையே தூது சென்று வெற்றியும் கண்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் வரையில் எல்லா உலகத் தலைவர்களும் அவரிடம் ஆலோசனை பெற வரிசையில் நின்றது உலகம் வியந்த உண்மை.


அமெரிக்காவின் வளர்ச்சி எப்படிச் சாத்தியமானது என்பதைக் கூர்ந்து கவனித்தார் லீ.

**(16ஆம் பக்கம் பார்க்க)**

**சிங்கப்பூரை வாழ வைக்க வேண்டிய கடமை யாருக்கும் இல்லை' என்று சொன்னவர் சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ. சிங்கப்பூர் என்கிற ஒரு ஊர் சிட்டுக்குருவியைப் போன்றது. சிட்டுக்குருவி பறப்பதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லாத பறவை. இருந்தாலும் பறக்கிறது. அதுபோல சிவப்புப் புள்ளி என்று அழைக்கப்படும் சிங்கப்பூரும் தனி நாடாகத் திகழ எந்தத தகுதியும் இல்லை. இருந்தாலும் எல்லா முரண்களையும் தடைகளையும் மீறிச் சிட்டுக்குருவியைப் போல உலக வானில் சிறந்து விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் லீ குவான் யூவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17

# சிம்ம சொப்பனம்

பெயருக்குத் தான் புரட்சிக்காரர்களே தவிர அவர்களால் உருப்படியாக எதையும் சாதிக்க முடியவில்லை. ஒரு தெளிவான அரசியல் சித்தாந்தமோ, அதை நடைமுறைப்படுத்த தேவையான செயல்திட்டமோ அவர்களிடம் இல்லை. க்யூப அரசியல் குறித்த தெளிவான பார்வையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் புரட்சியாளர்களில் பலர் அரசுக்கு ஆதாரமானவர்களாக இருந்தார்கள் என்பது தான் வேடிக்கை. பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி அரசியல் என்பது தீராத பிரச்சினையாகவே நீடித்து வந்தது. ஒரு முழு மாஃபியா கூட்டத்தையே சமாளிக்க வேண்டிய அவசியம் காஸ்ட்ரோவுக்கு ஏற்பட்டது. அதுவும் எப்படிப்பட்ட மாஃபியா? பல்கலைக் கழக காவல்துறை, நகர்ப்புற காவல் துறை இரண்டையும் தனது சுண்டு விரலால் ஆட்டிப்படைக்கும் அசுர சக்தி கொண்ட கொலைகாரப் படை. போதை மருந்து கடத்துவது முதல் கொலை செய்வது வரை இவர்களது பணி நீளும். இவர்களுக்கு மாணவர் தலைவரைப் பிடிக்கவில்லை என்றால் அவனை ஒழித்துக் கட்டித்தான் மறுவேலை பார்ப்பார்கள். இந்த மாஃபியா கும்பலுக்கு அரசின் ஆதரவு இருந்தது என்று சொல்லத் தேவையில்லை.

மாணவர்கள் மத்தியில் காஸ்ட்ரோவுக்கு பெருகிவரும் ஆதரவைக் கவனித்த மாஃபியா காஸ்ட்ரோவை கட்டம் கட்டியது. காஸ்ட்ரோவுக்கும் இந்த விஷயம் தெரியவர, அவரும் இந்தக் கூட்டத்தை எதிர்கொள்ளத் தயாராகவே இருந்தார். காஸ்ட்ரோவை ஆதரிக்க எந்தக் கட்சியும் அரசியல் குழுவும் முன் வரவில்லை. மாணவர்கள் மட்டுமே அவர் பின்னால் நின்றனர். ஆனால் அந்த மாஃபியா கும்பலுக்குப் பின்னால் அரசாங்கம் இருந்தது. அரசாங்கத்தின் பின்னால் அமெரிக்கா இருந்தது.

கம்யூனிஸ்டுகள் எங்கு பரவினாலும் அவர்களை ஒழித்துக் கட்ட அமெரிக்க ஆர்வம் காட்டி வருவதை காஸ்ட்ரோ உணர்ந்து கொண்டார். கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் யார், அவர்களை ஏன் அமெரிக்கா எதிர்க்கிறது என்று அவருக்கு புரியத் தொடங்கியது. கம்யூனிச சித்தாந்தத்தை ஆதரிப்பவர் தொழிலாளியாக இருந்தாலும் சரி, எழுத்தாளராக இருந்தாலும் சரி , கலைஞராக இருந்தாலும் சரி அவரை ஒழித்துக் கட்டியபிறகு தான் ஓய்ந்தது அமெரிக்கா. அமெரிக்காவின் மிருகத்தனமான செயல்களை ஒவ்வொன்றாக அறிந்து கொண்ட போது காஸ்ட்ரோ அதிர்ந்து போனார். தனக்கு ஒத்துவராத தலைவர்களை அநாயாசமாக வீழ்த்துவது கலவரங்களை தூண்டி விடுவது. மாஃபியா கும்பல்களை வளர்த்து விடுவது என்று அமெரிக்கா நடத்தி வரும் அராஜக அரசாங்கத்துக்கு முடிவே கிடையாதா என்று ஏங்கினார்.

குறிப்பாக க்யூபாவை அமெரிக்கா எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது என்று எண்ணிப் புழுங்கினார். நமது வளங்களை நம்மிடமிருந்து கொள்ளையடித்து நம்மை ஏழைகளாக மாற்றி விட்டு அமெரிக்கா மட்டும் கொழுத்துக் கொண்டே போவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

தேர்தல் நெருங்க நெருங்க மோதல்கள் வலுத்தன. பல்கலைக்கழக வளாகத்துக்குள் காஸ்ட்ரோ நுழையவே கூடாது என்று தடை விதித்தது மாஃபியா. கொலை மிரட்டல்கள் அவரைத் தேடி வந்தன. தன்னை எதிர்த்து நிற்கும் மாஃபியாவின் பலம் என்ன என்று கூட காஸ்ட்ரோவுக்குத் தெரியாது. அவர்கள் எத்தனை பேர்? எங்கெல்லாம் பரவியிருக்கிறார் கள்? எதுவுமே தெரியாது. ஆனாலும் எதிர்க்கத் தயாராகவே இருந்தார்.

ஒரு பக்கம் அசாத்திய தைரியம். மற்றொரு பக்கம் ஒரு வித கலக்கம். 20 வயதான ஃபிடலின் மனோநிலை இப்படித்தான் இருந்தது. என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள். நீயா, நானா என்று பார்த்து விடலாம்! என்று சவால் விட்டபடி கொலை மிரட்டல்களை சட்டை செய்யாமல் பல்கலைக்கழகத்துக்குள் அவரால் நுழைய முடிந்தது. அதே சமயம் தனியாக கடற்கரைக்குச் சென்று என்ன காரணம் என்று தெரியாமல் மவுனமாக அழவும் முடிந்தது.

தனிமையில் இருக்கும் பொழுது திடீரென்று ஒரு கும்பல் சூழ்ந்து கொண்டால் என்ன செய்வது? அவர்களை எதிர்கொள்வது எப்படி? நண்பர்கள் ஒரு யோசனை கூறினார்கள். முதலில் தயங்கினார். பிறகு அவர்கள் கொடுத்த துப்பாக்கியை வாங்கி சட்டைப்பையில் செருகிக் கொண்டார்.

ஆயுதத்துடனான அவரது பரிச்சயம் தொடங்கியது அன்று தான். அவருடைய முதல் ஆயுத நண்பன் 15 ஷாட் பிஸ்டல்.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 668

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

**மேலிருந்து கீழ்**

1 - பயமற்ற தன்மை.
2 - ஓர் இராசி.
3 - நாள்.
4 - இன்பம் அல்ல.
5 - வதந்தி.
8 - கீழான செயல் செய்பவன்.
10 - உணவுக்குழாயில் நடக்கும் தொழிற்பாடு.
12- பன்னிரண்டு அங்குலம் கொண்டது.
13- தலை.
15- சிங்கம்.
16- நாண்.
17- இரவு அல்ல.
18 - அறிவு தருவது.
20 - பொருத்தமில்லாத.

**இடமிருந்து வலம்**

1 - ஒன்றைச் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்தல்.
4 - தென்னம் மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது.
6 - பெரியோன்.
7 - கடல்.
9 - ஒரு கீரை வகை.
11 - நடு இடம்.
12 - ஒரு சமையலறைக் கருவி.
13 - தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது.
14 - ஈரலிப்பான இடம் இதற்கு உகந்தது.
16 - அன்பு கொண்டுள்ளவன்.
18 - கடுமையானது என்பதைக் குறிக்கும்.
19 - பழுத்தல்.
21 - சூறாவளி.
22- காப்பியம்.

அனுப்புபவர் பெயர்:-----------------------------------

விலாசம்:-----------------------------------

-----------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 668

■ சொற்சிலம்பம் போட்டி 668ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மே 06 மற்றும் மே 13 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

வே. சரஸ்வதி,
அம்மன்,
குடத்தனை.

திருமதி வற்சலா துரைசிங்கம்,
ஆழ்வான் கிணற்றடி,
பன்னாலை,
தெல்லிப்பளை.

சு. மாதவி,
தொட்டிலடி மத்தி,
சண்டிலிப்பாய்.

சி. சயந்தன்,
இலங்கை மின்சார சபை,
முல்லைத்தீவு.

இ. செல்லம்மா,
சோறன்பற்று,
பளை.

### போட்டி இல 666இல் பரிசு பெற்றோர்

**1**
திருமதி. தவலிங்கம் இராசதேவி,
தசபவனம், சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

**2**
அ. டக்சயன்
சோதிவா[illegible] [illegible]தயிட்டிபுலம்,
தெல்[illegible]ளை.

**3**
இ. சண்முகதாஸ்,
கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

### சொற்சிலம்பம் போட்டி 666இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. மதுரகவி.
2. காந்தி.
3. மது.
4. கபிலன்.
5. சக.
6. திருவுளம்.
8. நன்.
11. வனிதை.
12. கடிதம்.
13. அயலவன்.
15. நாவலர்.
17. ரிசி.
20. சகா.
21. பாரி.
23. திணை.

**இடமிருந்து வலம்**

1. மகாமகம்.
5. சதி.
7. துந்துபி.
8. நகரு.
9. ரதி.
10. லவன்.
12. கன்னி.
13. அள.
14. விநாடி.
16. தைரியம்.
18. வதம்.
19. சில.
20. சலம்.
21. பா
22. வதி.
24. கார்.
25. பெரியன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் சில்க் ஸ்மிதா

ஒப்பனைக் கலைஞராகத் தனது சினிமா வாழ்க்கையைத் தொடங்கி பல கோடி நெஞ்சங்களின் அடங்காத ஆசைகளைக் கொள்ளை கொண்ட விஜயலட்சுமி என்ற அ[illegible]ப்பட்[illegible]த சொந்தப்பெயரையும் சில்க் ஸ்மிதா என்று யாவராலும் அறியப்பட்ட ஒப்பற்ற சினிமாக் கனவுக்கன்னி 1960 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி பிறந்து 23 செம்ரெம்பர் 1996 இல் வாழ்க்கையை முடித்துக்கொண்டார்! தமிழ் நடிகர் வினுசக்கரவர்த்தியால் வண்டிச்சக்கரம் என்கிற திரைப்படத்தில் சிலுக்கு என்கிற சாராயக்கடையில் பணிபுரியும் பெண் கதாபாத்திரத்தில் முதன் முறையாக நடித்தார். அந்தப் பெயரே இவருக்கு சினிமாவில் நிலைத்துவிட்டது. இவரது 17 வருட சினிமா வாழ்க்கையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகள் அனைத்திலும் 450ற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் சில்க் ஸ்மிதா நடித்துள்ளார்.



இந்தியாவின் ஆந்திர மாநிலம் ஏலூரு என்ற இடத்தில் பிறந்த விஜயலட்சுமி (பின்னாளில் சில்க் ஸ்மிதா). பிறப்பால் ஆந்திரமாநிலத்தை சேர்ந்தவராயினும் இவரது பூர்வீகம் தமிழ் நாட்டின் கரூர் ஆகும். இவர் வறுமையின் காரணமாக பள்ளிப்படிப்பை நான்காம் வகுப்போடு நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. இவரது வசீகர தோற்றத்தின் காரணமாக பலரது தொல்லைகளுக்கு ஆளானார். இதனால் இவரது குடும்பத்தார் இவருக்கு சிறுவயதிலேயே திருமணம் முடித்துவைத்தனர். இவரது குடும்பவாழ்க்கையில் ஏற்பட்ட துன்பத்தின் காரணமாக இவர் சென்னைக்குப் பிழைப்புத் தேடியும் புது வாழ்க்கை தேடியும் ஓடிவந்து இவரது உறவினர் வீட்டில் தங்கினார்.

இவர் தனது திரைப்பட வாழ்க்கையை இரண்டாம் நிலை நடிகைகளுக்கான ஒப்பனை கலைஞராக ஆரம்பித்தார், பின் தமிழ் நடிகரும் இயக்குநருமான வினுச்சக்ரவர்த்தியின் மூலம் 'வண்டிச்சக்கரம்' என்கிற தமிழ் திரைப்படத்தில் சில்க் என்கிற ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இந்தப் படத்தில் இவரை ஸ்மிதா என்கிற புது புனைப்பெயரில் அறிமுகபடுத்தினார். வினுச்சக்கரவர்த்தியின் மனைவி சில்கிற்கு ஆங்கிலம் பயிற்றுவித்தார். அதே நேரத்தில் சில்க் வேறு ஒருவரிடம் நடனமும் கற்றுகொண்டார். வண்டிச்சக்கரத்தில் நடித்தபின்பு இவரது கதாபாத்திரமான சில்க் என்கிற பெயரும் ஸ்மிதா என்கிற பெயரும் இணைந்து இவரது அடையாளம் ஆனது.

**1980களில் இவரது நடனம் இடம்பெறாத தமிழ் திரைப்படங்களே இல்லை என்கிற அளவிற்கு உயர்ந்தார். கிறங்கவைக்கும் உடல் வனப்புக்கும் மயக்கம் தரும் பார்வைக்கும் சொந்தக்காரியாக விளங்கிய சில்க் கொஞ்சம் கொஞ்சமாக தென்னிந்தியத் திரையுலகின் கவர்ச்சி ராணியாக உருவெடுத்தார். படம் வெற்றி பெற வேண்டுமானால் சில்க் ஸ்மிதா திரையில் தோன்றுவது அவசியம் என்ற ஒரு காலகட்டம் தென்னிந்திய சினிமாவில் இருந்தது.**

பின்னர் ஸ்மிதா 'இணையே தேடி' என்கிற திரைப்படம் மூலம் 1979இல் மலையாள திரைப்பட உலகுக்கு அறிமுகம் ஆனார். 'வண்டிச்சக்கரம்' படத்தின் மூலம் கிடைத்த வெற்றியினால் ஸ்மிதா புகழின் உச்சத்துக்கே சென்றார். அந்தப் படத்தில் அவர் ஏற்ற கதாபாத்திரத்தின் தாக்கத்தின் காரணமாக அவரால் வேறு விதமான வித்தியாசமான கதாபாத்திரங்களை எளிதாகப் பெறமுடியவில்லை. இவர் பின்னர் தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் சில ஹிந்தி சினிமாக்களிலும் நடித்தார். இவரது கவர்ச்சியான தோற்றத்துக்கும் 'மூன்று முகம்' திரைப்படத்தில் அவர் ஏற்றிருந்த துணிவான கதாபாத்திரத்தினாலும் இவர் தமிழ் தவிர தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய துறைகளிலும் புகழ்பெற்றார். இவரது கவர்ச்சி நடனம் மட்டுமே இடம்பெற்ற 'அமரன்' போன்ற படங்கள் பெரிய அளவில் வெற்றியை ஈட்டின. 1980களில் இவரது நடனம் இடம்பெறாத தமிழ் திரைப்படங்களே இல்லை என்கிற அளவுக்கு உயர்ந்தார். கிறங்கவைக்கும் உடல் வனப்புக்கும் மயக்கம் தரும் பார்வைக்கும் சொந்தக்காரியாக விளங்கிய சில்க் கொஞ்சம் கொஞ்சமாக தென்னிந்தியத் திரையுலகின் கவர்ச்சி ராணியாக உருவெடுத்தார். படம் வெற்றி பெற வேண்டுமானால் சில்க் ஸ்மிதா திரையில் தோன்றுவது அவசியம் என்ற ஒரு காலகட்டம் தென்னிந்திய சினிமாவில் இருந்தது.

இவர் நடிப்பில் பல பரிமாணங்கள் கடந்திருந்தாலும் இவரை பத்திரிகைகளும் சில சினிமாவும் கவர்ச்சி நடிகையாகவே அடையாளப்படுத்தின. ஆனாலும் 'அலைகள் ஓய்வதில்லை'(1981), 'நீங்கள் கேட்டவை', 'தாலாட்டு கேக்குதம்மா' போன்ற திரைப்படங்களில் இவர் ஏற்று நடித்த சில நல்ல கதாபத்திரங்களின் மூலம் தனக்கு கவர்ச்சி மட்டுமின்றி அனைத்துவிதமான நடிப்பின் பரிணாமங்களும் வரும் என ஆணித்தரமாக நிரூபித்தார். 'லயனம்'(1989) என்கிற திரைப்படத்தில் இவர் நடித்த கதாபாத்திரம் இவரது மற்றொரு வித்தியாசமான பரிணாமத்தினை உலகுக்கு எடுத்து காட்டியது. இந்தப்படம் பல மொழிகளில் மொழிபெயர்க்கபட்டது குறிப்பிடத்தக்கது. இவரது மற்றொரு நல்ல படமான பாலு மகேந்திராவின் 'மூன்றாம் பிறை' மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. கமலஹாசன், ஸ்ரீதேவியுடன் இணைந்து இவர் நடித்த இந்தப் படம் ஹிந்தியிலும் 'சத்மா' என்கிற பெயரில் மீண்டும் படமாக்கப்பட்டது.



ஸ்மிதா

1996இல், சென்னையில் அவருக்கு சொந்தமான அடுக்கு மாடி குடியிருப்பில் பிணமாக கண்டுபிடிக்கபட்டார். ஸ்மிதா தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக அறியப்பட்டார். இந்த நிகழ்வுக்கு முன்பு இவர் திரைப்படத் தயாரிப்பாளராக முயற்சித்து வந்ததாகவும் அதில் ஏற்ப்பட்ட கடனாலும், மேலும் காதல் தோல்வியினால் ஏற்பட்ட குடிப்பழக்கதினாலும் இவர் மன இறுக்கத்துக்கு ஆளானதாக நம்பப்படுகிறது. ஆனாலும் இவரது மரணத்தினைச் சுற்றிப் பல சர்ச்சைகள் இன்றும் இருந்து வருகின்றன.

**1996இல், ஸ்மிதா சென்னையில் அவருக்கு சொந்தமான அடுக்கு மாடி குடியிருப்பில் பிணமாக கண்டுபிடிக்கபட்டார். ஸ்மிதா தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக அறியப்பட்டார். இந்த நிகழ் விற்கு முன்பு இவர் திரைப்படத் தயாரிப்பாளராக முயற்சித்து வந்ததாகவும் அதில் ஏற்பட்ட கடனா லும், மேலும் காதல் தோல்வியினால் ஏற்பட்ட குடிப் பழக்கதினால் இவர் மன இறுக்கத்திற்கு ஆளான தாக நம்பப்படுகிறது. ஆனாலும் இவரது மரணத் தினை சுற்றி பல சர்ச்சைகள் இன்றும் இருந்து வருகின்றன.**

நடிகை சில்க் ஸ்மிதா தற்கொலை செய்து கொண்டிருக்க வாய்ப்பில்லை. அவர் கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சில்க் ஸ்மிதாவின் முதல் படத்தையும், கடைசிப் படத்தையும் இயக்கியவரான திருப்பதி ராஜா கூறியுள்ளார். தமிழ் சினிமாவில் சில்க் ஸ்மிதா என்ற மந்திரப் பெயர் ஏற்படுத்திய மாயாஜாலம் இன்றளவும்

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தமிழர்களின் தலை நிமிர்வு ஜெயகாந்தன் - இளையராஜாவின் உருக்கமான கடிதம்!

...ழுத்தாளர் ஜெயகாந்தன்
...றைவை அடுத்து அவருக்கு
...ருக்கமாக இருந்த இசைஞானி
...ளையராஜா உருக்கமான கடிதம்
...ன்றை எழுதியுள்ளார். அந்தக்
...டிதத்தில்,
...ன் அண்ணன் பாஸ்கர்,
...ங்கைஅமரன், பாரதிராஜாவோடு முதன் முதலாக
...சென்னைக்கு வந்தபோது நாங்கள்
...போய் நின்ற இடம் ஜெயகாந்தனின்
...வீடுதான் நாங்கள் உங்களை
...நம்பித்தான் வந்திருக்கிறோம் என்று
...சொன்ன போது என்னை நம்பி
...எப்படி நீங்கள் வரலாம் என்று கேட்டு
...எங்களுக்குள் நம்பிக்கை விதையை
...விதைத்தவர் ஜெயகாந்தன்.
...தன்னுடைய எழுத்துக்கள் மூலம்
...எளிய மனிதர்களின் குரலை
...ஒலிக்கச்செய்தவர். தமிழ்
...எழுத்துலகில் மட்டுமில்லாமல்
...திரையுலகிலும் தன்னுடைய
...அடையாளத்தைப் பதித்தவர் ஜேகே.
...தமிழ் எழுத்துலகின் புத்தெழுச்சிக்கு
...பெரிதும் காரணமாக இருந்தார். புதிய
...படைப்பாளிகளின் கலங்கரை
...விளக்கமாகவும் திகழ்ந்தார். தற்கால
...தமிழ் இலக்கியத்திற்கும்,
...தமிழர்களுக்கும் அவர் செய்த
...தொண்டு மறக்க முடியாதது.
...தமிழர்களின் தலை நிமிர்வு
...ஜெயகாந்தன். அவர் என்றென்றும்
...தமிழர்களின் நெஞ்சத்தில் நீங்காமல்
...நிலைத்து நிற்பார்.
...ஜெயகாந்தன் அவர்களின் ஆத்மா
...சாந்தி அடைய இன்று மாலை
...திருவண்ணாமலையில் மோட்ச தீபம்
...ஏற்றுகிறேன்.

இப்படிக்கு,

இளையராஜா

என இளையராஜா ஜெயகாந்தன் குறித்து கடிதம் எழுதியுள்ளார்.



## சரியா... கோழி...

வீரம் படத்தின் வெற்...
தமன்னாவுக்கு வாய்ப்...
தமிழில் பையா மூலம்...
இயக்குநர் லிங்குசாமி...
திடீர் அழைப்பு. சண்...
விஷாலின் ஜோடி தம...
திகதி படப்பிடிப்பு தொ...
கோழிதான்!

## விலகினார்...

வலியவன் படத்தில்...
இடை. அந்தத் தொல்...
புனித் ராஜ் குமாரை...
போகிறார். வலு கவ...
தமிழில் இன்னும் நம்...
கள் அடுத் தடுத்து...
இயக்கும் படத்திலும்...
வியந்தாரா? கார்த்தி...
நத்தை இரண்டு பட...
இந்த ஜோடியை இ...
பலிக்கவில்லை. நா...
படத்தில் கார்த்திக்கு...
படத்திலிருந்துதான்...



இப்போது எல்லா மொ...
இருந்தும் எமி ஜாக்ச...
தமிழில் தனுஷ், உதய...
களின் நாயகி. அடுத்...
நாயகனான விஜய்யுட...
இருக்கிறார். பிரபுதே...
விடுவாரா? இந்தியில்...
சிங் இஸ் பிளிங் படத்...
நாயகியாக்கிவிட்டார்...
பிரிட்டிஷ் ராஜ்யம்!



## கல்யாண நாயகியி... அடுத்த படம்

கல்யாண நாயகி த்ரிஷா அடுத்து நா...
முக்கியத்துவம் உள்ள ஒரு படத்தில் ந...
இருக்கிறாராம். அது கமல் நடித்த ஜப்...
கல்யாணராமன் படத்தின் சாயல். பெ...
படத்தை இந்தியில் நாயகியாக மாற்றி...
முருகதாஸ் இயக்குவது போல, கமல்...
இரண்டு வேடங்களையும் நாயகியாக...
அதில் த்ரிஷா நடிக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ான ...றிதான்!

...ன் வெற்றிக்குப் பிறகும் தமிழில் ... வாய்ப்புகள் அமையவே இல்லை. ... மூலம் பெரிய இடைவெளி கொடுத்த ...ருசாமியிடம் இருந்து தமன்னாவுக்கு .... சண்டக்கோழி பார்ட் 2 படத்தில் ...டி தமன்னாவேதான். மே 1ஆம் ...ப்பு தொடங்குகிறது. சரியான



## ... ஸ்ருதிஹாசன் ...

...டத்தின் தோல்வி இயக்குநர் ...வனுக்கு மிகப் பெரிய ...தோல்வியிலிருந்து உடனடியாக ...ல, கன்னட நட்சத்தி... ...மாரை வைத்து இவர் வேற மாதிரி படத்தை இயக்க... ...லு கவனம் ஈர்க்கிறார்!

...னும் நம்பர் 1 நயன்தாராதான். அவர் நடித்த ஏழு பட... ...டுத்து வெளியாக இருக்கின்றன. ஆர்யா நடிக்க விஜய... ...த்திலும் இணைகிறார். ...ல்லாம் உன்னைக் கண்டு ... கார்த்தியுடன் தமன்னா இணைந்து ... பையா, சி... ...டு படங்களுமே வில் வேட்டை நடத்தியதால், மீண்டும் ...ய இணையவைக்க பல முயற்சிகள் நடந்து... ...ல். நாகார்ஜுனா - கார்த்தி நடிக்கும் தமிழ் - தெலுங்கு ...த்திக்கு ஜோடி தமன்னாவேதான். இந்தப் ...துதான் விலகினார் ஸ்ருதிஹாசன்!

...லா மொழிகளில் ...ராக்சருக்கு அழைப்பு. ..., உதயநிதி படங் ... அடுத்து டாப் ...ஜய்யுடனும் நடிக்க ...ரபுதேவா சும்மா ...ந்தியில் தான் இயக்கும் ...ங் படத்தின் ...ிட்டார். மீண்டும் ...யம்!

# வெளியாகுமா வாலு?

சிம்பு நடிப்பில் உருவாகிவரும் படம் வாலு. இந்தப் ...ஹன்சிகா நடித்துள்ளார். ...கிறார். ...இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் ...இசையமைத்துள்ளார். நிக் ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் படத்தில் நடிக்கும் போது சி...ம்பு, ஹன்சிகா காதல் பிரச்னைகளால் சிறிது காலம் படப்பிடிப்பு முடிவடையாமல் நின்றது. படத்தில் நடிக்க ஹன்சிகா மறுத்து விட்டதாகவும், தயாரிப்பாளரிடம் சிறு பிரச்சினை என்றும் செய்திகள் வெளியாகின.

அதன்பிறகு பிரச்சினைகள் எல்லாம் சுமுகமாக முடிந்து படப்பிடிப்பை தொடங்கினர். இறுதியாக படப்பிடிப்பை முடித்து, பாடல்கள், கதைவசனங்கள் மற்றும் வீடியோ பாடல்கள் என வெளியிட்டுவிட்டார்கள். படம் மட்டும் வெளி வரவில்லை. வாலு 2012இல் படம் தொடங்கப்பட்ட நாள் முதலே தீபாவளி வெளியீடு என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இரண்டு தீபாவளி கடந்தும் படம் மட்டும் வந்தபாடில்லை.

அதன் பிறகும் வெளியீட்டுக்கு பல திகதிகள் குறிக்கப்பட்டும் படம் அந்த திகதியில் வெளியாகவில்லை. இந்தநிலையில் வாலு திரைப்படம் தற்போது மே 9ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. எனவே, இந்த முறையாவது குறிக்கும் திகதியில் படத்தை வெளியிட்டு ரசிகர்களை ஏமாற்றாமல் இருப்பார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





## - கஜிபாலாவின் குத்தாட்டம்

பானு படம் ஒரு நாத்திக இந்து வாலிபனுக்கும் முஸ்லிம் பெண்ணுக்கும் நடக்கும் காதல் போராட்டம்தான் இந்தத் திரைப்படம். இதன் படப்பிடிப்பு முன்னரே... சென்னை அதன் சுற்றுப்புறங்களில் நடைபெற்றது. இந்தப் படத்தில் மொத்தம் 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு குத்தாட்ட பாடலுக்கு கஜிபாலா ஆடியுள்ளார்.

## ...கியின் ...ம்

...த்து நாயகிக்கு ...த்தில் நடிக்க ...த்த ஜப்பானில் ...ல். மௌனகுரு ... மாற்றி ஏ.ஆர்... ... கமல் நடித்த ...கியாக மாற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்ச வியாபாரியும் முட்டாள் உதவியாளர்களும்

முன்னொரு காலத்தில் பணக்காரத் துணி வியாபாரி ஒருவன் இருந்தான், பணக்காரனாக இருந்தாலும் படு கஞ்சன். அவனிடம் வேலை செய்தவர்கள் அனைவரும் படு முட்டாள்கள். புத்திசாலிகளை வேலைக்கு வைத்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டுமு என்று, தன்னிடமே படித்து தனக்குப் போட்டியாக வியாபாரம் தொடங்கிடுவார்களோ என்று நினைத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஒரு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு, மிகக்குறைந்த கூலிக்கு அமர்த்திய முட்டாள் வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான். அளவுக்கு அதிகமாக பொருள்களை ஏற்றியதால் வழியில் பாரம் தாங்காமல் வழியில் ஒட்டகம் கீழே விழுந்து விட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், "நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாத போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்தும் குறைந்த கூலி கொடுத்து அவர்களை விலை பேசியிருந்தான் வணிகன். எல்லோரும் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால், வியாபாரியோ வழித்துணைக்குதானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபடி வேலை செய்ய வேண்டும். இதனால் தனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான். சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

"நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான் ஒருவன். பெட்டிகளுக்கு உள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகள் நனையாமல் பார்த்துக் கொள்வோம்," என்றான் அடுத்தவன்.

இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர். மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாகிவிட்டன. ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், "ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே," என்று கோபத்துடன் கத்தினான்.

முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் சிறிது கூட நனையவில்லை. நீங்களே பாருங்கள்," என்றான் அவர்களில் ஒருவன். "முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை," என்று அவர்களை விரட்டினான் வணிகன்.

கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனையுடன் ஊர் திரும்பினான் வணிகன்.



## வர்ணம் தீட்டுவோம்

## பூனை அன்னை



எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் தடவும்

## செங்கால் நாரைகள்



செங்கால் நாரைகள் அல்லது 'வர்ண நாரைகள் நீர்நிலைகளிலும், குளங்களிலும், காயல்களிலும் (உப்புநீர்) காணப்படும் பறவை ஆகும். வெள்ளை நிற செங்கால்நாரையின் அலகு மஞ்சள் நிறத்தில் நீண்டும், நுனி சிறிது கீழ்நோக்கி வளைந்தும் காணப்படும். சிறகின் நுனியில் நீண்ட ஊதா நிற சிறகுகள் காணப்படும். இதன் நாக்கு பனங்கிழங்கின் உள்குருத்து போன்றிருக்கும். இதன் முகமும், தலையின் முன்பகுதியும் இறகுகளற்று காணப்படும். தூரப்பார்வையில் இது கறுப்பாக தெரிந்தாலும், இது அடர்ந்த ஊதா நிறமே. இரண்டு தோள்பட்டைகளின் நடுவிலும், முதுகின் பின்பகுதியில் வாலுக்கருகிலும் பளிச்சென்ற சிவப்புநிற இழை இறகுகள் சிதறியதுபோல் காணப்படும். மார்பில் இரண்டு சிறகுகளுக்கிடையில் ஊதாநிறப்பட்டை காணப்படும். வயிற்றின் பிற பகுதிகள் வெண்மை நிறத்தில் காணப்படும். வால் முக்கோண வடிவத்தில் ஊதா நிறத்தில் காணப்படும். கால்கள் சிவப்பு நிறத்திலும், சில சமயங்களில் இளம் ஊதா நிறத்திலும் காணப்படும். எங்கெல்லாம் வாழும் சூழ்நிலை காணப்படுகிறதோ அங்கு சென்று இரைதேடும். நீரில் நடந்துசெல்ல வசதியாக இறகுகளற்ற நீண்ட கால்கள், முன்னால் மூன்று விரல்களுடனும், பின்னால் ஒரு விரலுடனும் காணப்படும். விரலிடைச் சவ்வு தேய்ந்து காணப்படும்.

## அறிந்து கொள்ளுங்கள்

- சிரிக்க வைககும் வாயு எது?
  நைட்ரஸ் ஆக்ஸைடு
- தங்கத்தின் வேதியல் பெயர் என்ன?
  அயூரியம்
- இஞ்சியில் எந்தப் பாகம் உணவுக்குப் பயன்படுத்தப்படுகிறது?
  தண்டுக்கிழங்கு
- கோழி குஞ்சு பொரித்து எத்தனை நாள்கள் அடை காக்கும்?
  21 நாள்கள்
- சாணத்திலிருந்து என்ன வாயு கிடைக்கின்றது?
  மீத்தேன்.
- முதல் தமிழ்ப்பத்திரிகை எது?
  சிலோன் கெசட்
- பிரதமரும் மந்திரிகளும் இல்லாத நாடு எது?
  சுவிட்சர்லாந்து
- காகமே இல்லாத நாடு எது?
  நியூஸ்லாந்து
- உடலில் இரத்தம் பாயாத பகுதி எது?
  கருவிழி
- மிகச் சிறிய கோள் எது?
  புளுட்டோ
- காற்று நகரம் என்று எதனை அழைக்கின்றோம்?
  சிக்காக்கோ
- முதன் முதலில் நினைவு அஞ்சல்தலை வெளியிட்ட நாடு எது ?
  பெரு
- எரிமலை இல்லாத கண்டம் எது?
  ஆஸ்திரியா
- கணனித்தயாரிப்பில் முதன்முதலில் இருக்கும் நாடு எது?
  அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆதங்கன்

# செம்மரக்காட்டில் செந்தமிழ் மேனிகள்



> **"வீரப்பன் இல்லாத அருமை இப்போது தான் எங்களுக்குத் தெரிகிறது. வீரப்பன் மட்டும் இருந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருப்பாரா?"**

"வீரப்பன் இல்லாத அருமை இப்போதுதான் எங்களுக்குத் தெரிகிறது. வீரப்பன் மட்டும் இருந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருப்பாரா?" என்ற கதையாடலே இப்போது தமிழகம் எங்கும் பரவலாக உலாவருகிறது. அப்படி வீரப்பனின் அருமையை உணர்வதற்கு நடந்த சம்பவம்தான் என்ன?

கடந்தவாரம் இந்தியாவில் ஆந்திராவில் உள்ள திருப்பதி வனப்பகுதியில் 20 அப்பாவித்தமிழர்கள் அந்த மாநிலப்பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். திருப்பதி வனப்பகுதியில் குறித்த 20 பேரும் சட்டவிரோதமாக செம்மரங்களை வெட்டியதாகவும் அதைத்தடுக்கச் சென்ற பொலிஸாரை குறித்த தொழிலாளர்கள் கடுமையாகத் தாக்கியதால் வேறு வழியின்றி அவர்களைச் சுட்டுக்கொல்லவேண்டிவந்ததாக ஆந்திரா அரசு ஒரு கதையை ஒப்புக்குச்சொல்லியிருக்கிறது. இந்தக் கதையை பச்சைக்குழந்தைகூட நம்புமா என்பது சந்தேகந்தான். அந்தளவுக்கு சிறுதுளி தர்க்க நியாயம் கூட இல்லாமல் 20 தமிழர்களையும் சுட்டுக்கொன்றமைக்கான காரணத்தை ஆந்திர அரசு சோடிக்க முனைந்திருக்கிறது.

ஆந்திர அரசு சொல்வதுபோல உண்மையிலேயே அந்த 20 தமிழர்களும் சட்டவிரோதமாக செம்மரங்களை வெட்டிக்கொண்டிருந்தபோது அதனைத் தடுத்த பொலிஸாரைத் தாக்கியதால்தான் சுட்டுக்கொல்லப்பட்டார்களா என்றால் அங்கும் நிறையக் கேள்விகள் எழுகின்றன.

**1.குற்றவாளிகள் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள்?**

**2. அப்படி அவர்கள் தாக்கப்பயன்படுத்திய ஆயுதங்கள் சடலங்களுக்கு அருகில் ஏன் இல்லை?**

**3. 20 சடலங்களுக்கு அருகிலும் எப்படிச் சொல்லிவைத்தாற்போல செம்மரக்கட்டைகள் இருந்தன?**

**4. பொலிஸாரைத் தாக்கும்போதுகூட அவர்கள் செம்மரக்கட்டைகளைக் கட்டிப்பிடித்தபடிதான் இருந்தார்களா?**

**5.தொழிலாளர்கள் தாக்கினாலும்கூட பொலிஸார் ஏன் காலுக்குக் கீழே சுடாமல் எல்லோரையும் சுட்டுக்கொன்றார்கள்?**

**6. ஒருவரைச் சுட்டுக்கொன்றாலே மற்றவர்கள் தப்பி அங்கிருந்து ஓடத்தானே முனைந்திருப்பார்கள். அப்படியிருக்கும்போது எப்படி எல்லோரும் வரிசையாக சடலங்களானார்கள்?**

**7.செம்மரங்களை வெட்டிய தொழிலாளிகளில் ஏன் ஒரு ஆந்திராவாசி கூட இருக்கவில்லை?**

இப்படி நிறையக் கேள்விகளைக் கேட்கலாம்.

இந்தியச் சட்டத்தின்படி ஒரு குற்றவாளியைச் சுடுவதாயின் முதலில் முழங்காலுக்குக் கீழேயே சுட வேண்டும். ஏனெனில் பொலிஸாருக்கு சட்டத்தின் முன்னிலையில் குற்றவாளியைக் கைதுசெய்து நிறுத்துவதற்கான உரிமைதான் இருக்கிறதே தவிர குறித்த நபருக்குத் தண்டனை வழங்குவதற்கான உரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, என்னதான் கொடிய குற்றவாளியாக இருந்தாலும் அவரை உயிரோடு பிடிப்பதற்கே பொலிஸார் முனையவேண்டும்.

ஆனால், இந்தச் சட்டத்தை இந்தியப் பொலிஸார் எந்தளவு தூரம் மதிக்கிறார்கள் என்பது கேள்விக்குறிதான். சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தப்படும் பல கொடூரமான குற்றவாளிகள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பிவிடுவதுண்டு. இதனால் அந்தக் குற்றாவளியைப் பிடிப்பதற்கு பொலிஸார் எடுத்த காலம், உழைப்பு, அர்ப்பணிப்பு எல்லாமே வீணாகிவிடுவதுண்டு. எனவே இந்த ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காகவும், இதுபோன்ற குற்றவாளிகளுக்கு ஒரு எச்சரிக்கையை விடுப்பதற்காகவும் செயற்கையான ஒரு மோதலை உண்டுபண்ணி அந்த மோதலின் முடிவில் திட்டமிட்டபடி குறித்த குற்றவாளியைச் சுட்டுக்கொல்வதுண்டு. இதனை 'என்கவுண்டர்' என்று சொல்வார்கள்.

உதாரணமாக கடந்தவருடம் இந்தியாவில் தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் இரண்டு பள்ளிச் சிறுவர்கள் கடத்தப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்கள். அவர்களைக் கொன்றவர் ஒரு ஓட்டோச்சாரதி. அந்த ஓட்டோச் சாரதி கைது செய்யப்பட்ட பின்னர் அவரை 'என்கவுண்டரில்' கொல்வதென பொலிஸார் முடிவு செய்தனர். ஏனெனில் அவன் தானொரு மனநோயாளி என்று காட்ட முனைந்தான். அப்படி அவன் மனநோயாளி என்று மருத்துவச் சான்றிதழ் பெற்றுவிட்டால் அவனைச் சட்டத்தால் தண்டிக்க முடியாமல் போய்விடும். உண்மையில் அவன் குற்றவாளிதான் என்று பொலிஸாருக்கு நன்கு தெரிந்ததாலேயே 'என்கவுண்டரே' அவனுக்குப் பொருத்தமானது என முடிவெடுத்தனர். அவன் ஒரு நள்ளிரவில் திட்டமிட்டபடி சுட்டுக்கொல்லப்பட்டான். உடல் ஆற்றில் வீசப்பட்டது. 'என்கவுண்டர்' நடந்து அரை மணி நேரத்தில் கையில் துப்பாக்கி ரவைபட்ட காயத்தோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த ஓட்டோச்சாரதி கொலைக்குப் பயன்படுத்திய ஆயுதத்தை காட்டுவதாகப் பொலிஸாரை அழைத்துச்சென்றதாகவும் ஆயினும் அங்கு மறைத்து வைத்த துப்பாகியை எடுத்து பொலிஸாரை நோக்கிச் சுட்டதாகவும், இதன்போது ஒரு பொலிஸார் காயமடையவே திருப்பி பொலிஸாரும் சுட்டதில் குற்றவாளி கொல்லப்பட்டார் என்று 'பைலை' மூடியது பொலிஸ். இவ்வாறு நிறைய 'என்கவுண்டர்கள்' இந்தியாவில் சர்வசாதாரணம். ஆனால் எல்லா 'என்கவுண்டர்'களும் நியாயத்தை நிலைநாட்டுவதற்காக நடப்பதில்லை என்பதுதான் வேதனை.

அரசியல் வாதிகள் பொலிஸ் உயர் அதிகாரிகள் என்போர் தங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் அல்லது சுயலாபம் என்பவற்றுக்காக அப்பாவிகளைக்கூட இத்தகைய 'என்கவுண்டரில்' போட்டுத்தள்ளுவதுதான் அதிகமாக நடக்கிறது. இந்தியாவின் பிரதமராக முடிசூடிக்கொண்டுள்ள நரேந்திரமோடிகூட 2000 ஆம் ஆண்டு குஜராத்தில் நடைபெற்ற ஒரு போலி 'என்கவுண்டருக்கு' கட்டளையிட்டார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. நாட்டின் பிரதமரே போலி 'என்கவுண்டர்' வாதியாக இருக்கும்போது மாநில அரசுகள் மட்டும் இதில் அக்கறை காட்டாமல் இருக்குமா? அப்படி ஆந்திர அரசு காட்டிய அக்கறைதான் 20 அப்பாவித் தமிழர்களின் உயிர்களைப் பறித்திருக்கிறது.

சந்தன மரங்களைப்போலவே, செம்மரங்களை வெட்டுவதும் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஒன்று. ஆயினும், ஆந்திராவில் செம்மரங்கள் கடத்தப்படுவது மிக அதிகம். இந்தக் கடத்தலின் பின்னணியில் ஆந்திராவின் பணக்கார முதலைகளே உள்ளனர். ஆயினும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தால் அவர்களால் கிடைக்கும் நிதி மூலங்கள் அரசியல்வாதிகளுக்கு இல்லாமல் போய்விடும். எனவே, சேலையும் கிழியாமல் முள்ளுக்கும் நோகாமல் காரியமாற்ற வேண்டிய இக்கட்டு ஆந்திர அரசுக்கு எழுந்தது. ஆனால் மறுபுறத்தில் செம்மரக்கடத்தலை தடுக்குமாறு சுற்றுச்சூழலியலாளர்களும் மக்களும் பெரும் அழுத்தங்களைக் கொடுத்தார்கள். இந்த அழுத்தத்தில் இருந்து தப்பிக்கத்தான் பஞ்சம்போக்க பிழைக்க வந்த 20 தமிழர்களை போலி 'என்கவுண்டரில்' ஆந்திர அரசு சுட்டுப்பொசுக்கி இருக்கிறது.

இதன் மூலம் செம்மரக்கடத்தலைத் தடுக்க ஆந்திர அரசு தீவிர நடவடிக்கை எடுப்பதாகக் காட்டி அந்த மாநில மக்களை திருப்திப்படுத்தியதோடு, உண்மையான, குற்றவாளிகளையும் தப்புவித்து அவர்களின் அனுகூலங்களையும் பெறுவதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கிறது. சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதால் போலி 'என்கவுண்டர்' தொடர்பான எதிர்ப்புகள் ஆந்திராவில் எழுவதற்கு வாய்ப்பில்லை. போதாக்குறைக்கு கொல்லப்பட்டவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட, தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், தமிழகத்தில்கூடப் பெரியளவான எதிர்ப்புகள் கிளம்ப வாய்ப்பில்லை என்று கருதியே பலியாடுகளாகத் தமிழ்த் தொழிலாளிகளை ஆந்திர அரசு தேர்ந்தெடுத்தது.

ஆனாலும் கொலைக்குப் பின்னர் அதற்குரிய காரணங்களைச் சோடிப்பதில் அந்த அரசு விட்ட பிழைகள் இதுவொரு திட்டமிட்ட படுகொலை என்பதை வெளிச்சம்போட்டுக்காட்டிவிட்டன. கொல்லப்பட்ட தமிழர்கள் அனைவரும் செம்மரங்களை வெட்டியபோது பிடிபட்டவர்கள் அல்லர். குறித்த 20 பேரும் வறுமைகாரணமாக ஆந்திராவுக்குத் தொழில்தேடிச் சென்றவர்கள். அவர்கள் தங்கள் வேலையை முடித்துவிட்டு பஸ்ஸில் ஏறி தமிழகத்துக்குப் பயணித்துக்கொண்டிருந்தபோதே ஆந்திரப்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் பின்னரே இந்தக் கூட்டுக்கொலை நடந்திருக்கிறது.

இப்போது தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் இந்தக் கூட்டுக்கொலைக்கு நீதி கோரிப் போராட்டங்கள் வெடிக்கத்தொடங்கிவிட்டன. ஆனால் வழமைபோலவே இந்திய மத்திய அரசு இந்த விடயத்திலும் பாராமுகமாகவே இருக்கிறது.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் கொன்றுகுவிக்கப்பட்டபோது எமக்காகக் குரல்கொடுத்தவர்கள் தமிழக உறவுகள். ஆனால் இப்போது தமிழக உறவுகள் கூட்டுக்கொலைக்கு உள்ளாக்கப் பட்டபோது இலங்கையில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் குரல்கொடுக்கவில்லை. 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியில் ஈழத்துச் சிறுமி ஜெசிக்காவுக்காக கண்விழித்து கணனிமூலம் வாக்களித்த பேஸ்புக் போராளிகள் கூட, இந்தக் கொலைகளை கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

எங்களுக்காக மற்றவர்கள் போராடவேண்டும். ஆனால் நாங்கள் எவருக்காவும் போராடமாட்டோம். இதுவே ஈழத்தமிழர்களின் குணமாகிப்போய்விட்டதுபோலும். இனியேனும் இந்தக் குணத்தை மாற்றி எமது உறவுகளின் கூட்டுக்கொலைக்கு நியாயம்கோரிக் குரல்கொடுப்போம்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிதாமகனின் ...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணிதம், அறிவியல் முதலானவற்றில் அதிக தகுதி வாய்ந்த மக்களின் தங்கு தடை அற்ற குடியுரிமையே காரணம் என்று அறிந்து அதனை சிங்கப்பூரிலும் செயல்படுத்தினார். ஒரே தலைமுறையில் ஒரு நாட்டை மூன்றாம் தர வரிசையில் இருந்து முதல் தர வரிசைக்குக் கொண்டு வந்தார் திரு. லீ. கட்டுப்பாடில்லாத ஜனநாயகம் மக்களுக்குப் பயனளிக்காது, மக்கள் நலனில் அக்கறை கொண்ட கட்டுப்பாட்டுடன் கூடிய ஜனநாயகமே மக்களை மேம்படுத்தும் என்கிற சித்தாந்தத்தை முன் வைத்து அதில் வெற்றியும் கண்டார் திரு. லீ.

சிங்கப்பூருக்கு முன்னர் விடுதலை அடைந்த, பல இயற்கை வளங்கள் கொண்ட நாடுகள் இன்னமும் மூன்றாந்தர வரிசையிலேயே இருக்கையில், எந்த வளமும் இல்லாத ஒரு சிறிய தீவு உலக அளவில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது என்றால் அது லீ குவான் யூ என்னும் தனி மனிதனின் தீட்சண்யப் பார்வையே என்பதில் சந்தேகம் இல்லை.

நாடு உயர மக்கள் கல்வி கற்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார் லீ . வீட்டுப் பிள்ளைகள் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும் என்று அவரது அரசு அறிவித்தது. அதன் பலன் இன்று கல்லாத சிங்கப்பூரரே இல்லை என்கிற நிதர்சனம்.

சிங்கப்பூரையும் லீயையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவரது செயல்பாடுகள் அமைந்திருந்தன. ஊழல் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்கிற அளவுக்கு அவரது சொந்தச் செயல்பாடுகள் இருந்தன என்பது அல்ல அவரது வெற்றி; அவ்வாறே அந்த நாட்டு மக்களையும், மற்றத் தலைவர்களையும் உருவாக்கியுள்ளார் என்பதே அவரது வெற்றி. ஒரு மனிதன் தனது வாழ்நாளில் கடைப்பிடித்த கொள்கைகள் எவ்வளவு கடினமானவையாக இருப்பினும் அந்தக்கொள்கைகளை அனைவரும் பின்பற்றும்படி செய்வது ஒரு மிகப்பெரிய தீர்க்கதரிசியால் மட்டுமே முடிந்த செயல். லீ ஒரு தீர்க்கதரிசி.

நாட்டின் நல்லெதிர்காலம் தன்னுடன் முடிந்துவிடாமல் இருக்க இரண்டாம், மூன்றாம் கட்டத் தலைவர்களும் தன்னைப் போன்ற இயல்புகளும் பண்புகளும் கொண்டவர்களாகவே இருக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் லீ. மக்களவை உறுப்பினர்களை கொக்கோலா, ஷெல் முதலிய நிறுவனங்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உத்திகளைக் கொண்டு தேந்தேடுத்தார். நாட்டை ஒரு சிறந்த நிறுவனம் போல் நடத்த வேண்டும்; அதே நேரத்தில் அது அதீதமான மனித நேயம் கொண்டதாகவும், மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத் தினார் திரு.லீ. அதில் பெரிய அளவில் வெற்றியும் கண்டார்.

நான் செய்தவை எல்லாம் நல்லவையே என்று கூறவில்லை; ஆனால் அவை அனைத்துமே மிக உயர்ந்த நோக்கத்துக்காகச் செய்யப்பட்டவை என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை, என்று பலமுறைகள் கூறியுள்ளார். ஆணித்தரமாக மனதில் பட்டதை உரைக்கும் குணம் கொண்ட திரு லீ. உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது அவரிடம் இல்லாத ஒரு குணம். மற்றவர்களிடமும் அவர் அதையே எதிர்பார்த்தார்.

எனது சிங்கப்பூர் எந்தச் சித்தாந்தத்தின்படியும் உருவாக்கப்படவில்லை. பல முயற்சிகள் செய்தோம். சில வெற்றி கண்டன. சில தோல்வியுற்றன. நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய எந்த முயற்சியையும் செய்வதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை என்று சித்தாந்த ரீதியான கட்டுக்கள் எதுவும் இல்லாத ஒரு தலைவராகவும் அதே நேரத்தில் ஒரு பழுத்த யதார்த்த வாதியாகவும் திகழ்ந்தார் திரு.லீ.

உலகில் எந்த நாட்டுக்குச் சென்று வந்தாலும் சாங்கி விமான நிலையத்தில் இறங்கியதும் மிகப்பெரிய நிம்மதியும் பாதுகாப்பு உணர்வும் ஏற்படுவதை நீண்ட நாள் சிங்கப்பூர்வாசி என்கிற விதத்தில் நான் உணர்ந்திருக்கிறேன். அந்த உணர்வுகளுக்குக் காரணம் லீ கட்டமைத்த சிங்கப்பூர் என்னும் நம்பமுடியாத உண்மை என்பது எனக்குத் தெரியும்.

என்னைக் கல்லறையில் இறக்கும் போது கூட சிங்கப்பூருக்கு ஏதாவது தீங்கு நடப்பதை உணந்தால் உடனே உயிர்த்தெழுவேன் என்று முழங்கிய திரு,லீ, தனது 91ஆவது வயதில் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார்.

சிங்கப்பூர் வடிவில் லீ வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**- ஆமருவி தேவநாதன்**

## விக்கியை...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாட்டின் பிரதமர் ஒரு மாகாணத்துக்கு அதிகாரபூர்வமாகச் செல்லும் போது அந்தப் பிராந்தியத்தின் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசி மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடுவது அரசியல் நாகரீகம். அந்த நாகரிகம் பொதுவாக இலங்கையில் இல்லை. மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே சொந்தக் கட்சியாக இருந்தால் அது நடக்கும். வெவ்வேறு கட்சி என்று சொல்லும்போது அது இங்கே நடப்பதில்லை.

இந்தியாவில் பிஜேபி பிரதமர் தமிழகத்துக்கு வந்தால், தமிழக அ.தி.மு.க முதல்வர் பிரதமரை விமான நிலையத்தில் வரவேற்பார். அந்த வேளையில் பிரதமரின் பி.ஜே.பி கட்சிக்காரர்களும் அங்கு இருப்பார்கள். ஆனால், பிரதமரை முதலில் வரவேற்பது அ.தி.மு.க முதல்வர்தான். இதன்காரணமாக பிரதமரின் விஜயம் தொடர்பில் மாநில முதல்வரின் அலுவ லகத்துக்கு பிரதமரின் செயலாளர் முதலில் அறிவிப்பார். அதுதான் மரபு.

இங்கே அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதை முதல்வர் விக்னேஸ்வரன் நேற்று முல்லைத்தீவில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கலந்துகொண்ட கூட்டத்தில் வைத்து பகிரங்கமாக கூறி விட்டார். இது பிரதமர் அலுவலகத்தின் முறையற்ற செயல்.

மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டி மோதியது போன்று இன்னொரு சம்பவமும் நடந்துள்ளது. அதையும் முதல்வர் கூறியுள்ளார். வடக்கு விஜயம் பற்றி அறிவிக்காதது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணத்தில் விஜயகலா மகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற ஒரு வைபவத்துக்கு வரும்படி துணை அமைச்சர் ரோசி சேனநாயக்க, அழைப்பிதழை வைத்துக்கொண்டு முதல்வரை தொலைபேசியில் அழைத்துள்ளார். இது ஒரு அவமானகரமான செயல்.

இதையெல்லாம் கேட்ட அமைச்சர் ராஜித மிகவும் மனம் நொந்து போயுள்ளார். மாற்று கட்சிகளாக இருக்கலாம். ஆனால், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் கூட்டணியாக பிரச்சாரம் செய்து ஜனாதிபதி தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம். இன்று மைத்திரி பதவியில் இருப்பதற்கு தமிழ் வாக்குகள் எவ்வளவு தூரம் காரணம் என்று தோற்றுப்போன மஹிந்தவுக்கு தெரியும். மைத்திரி வெற்றி பெற்ற காரணத்தால்தான், இன்று ரணிலும் பிரதமர் பதவியில் இருக்கின்றார்.

இது தனக்கு நேர்ந்த தனிப்பட்ட அவமானம் அல்ல. தன்னை தெரிவு செய்துள்ள, தான் கேட்டுக்கொண்டபடி அன்னப்பறவைச் சின்னத்துக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவமானம் என்று முதல்வர் நினைப்பது தெரிகிறது.

இதையெல்லாம் விட இன்னொரு பாராதூரமான விடயத்தையும் முதல்வர் கூறியுள்ளார். தன்னையும், மாகாணசபை உறுப்பினர்களையும் சந்திக்க மறுத்த ரணில் கூட்டமைப்பு எம்பிக்களை சந்தித்துள்ளார். எம்பிக்களும் பிரதமரைச் சந்தித்துள்ளனர். மாவை, சுரேஷ், சரவணபவன், சிவசக்தி, வினோ, விநாயகமூர்த்தி, செல்வம் ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவை கண்டு கை குலுக்கியுள்ளனர். ஆனால், ஏன் நீங்கள் எங்கள் முதல்வரை சந்திக்கவில்லை? என்று எவரும் ரணிலிடம் கேட்கவில்லை. இது முதல்வரை மிகவும் மனம் நொந்து போகச் செய்துள்ளது.

ஆக, கிளிநொச்சி எம்பி சிறிதரன் மட்டுமே, எங்கள் முதல்வரை மதிக்காத பிரதமரை நான் சந்திக்கமாட்டேன் என்று பகிரங்கமாக கூறியுள்ளார். புலிகளைப் பிரித்துவிட்டதாக சொல்லப்படும் ரணில் விக்கிரமசிங்க இப்போது கூட்டமைப்பையும் பிரிக்கத் திட்டம் போடுகின்றார் என்ற செய்தி வடக்கில் கிளம்பியுள்ளது. முதல்வரை சந்திக்காத பிரதமரை சந்திக்க கூடாது என கூட்டமைப்பு தலைவர் தமக்கு கூறவில்லையே என சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியிருப்பது வேடிக்கையாக இருக்கின்றது. இதைவிட பெரிய விடயங்கள் பற்றியெல்லாம் விளக்கம் கொடுக்கும் சுரேஷுக்கு இத்தகைய சந்தர்ப்பத்தில் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பது தெரியாமல் போனது ஆச்சரியம்.

எனினும் அவர் இந்த சமாதானத்தையாவது சொல்லியுள்ளார். ரணிலைச் சந்தித்த ஏனையவர்கள் எதுவும் சொல்லவில்லை. கூட்டமைப்பு தலைவரும் இது வேறு ஏதோ ஒரு நாட்டில் பிறிதொரு கட்சியில் நடைபெற்றுள்ள சம்பவம் மாதிரியும், தனக்கு இதில் எந்த ஒரு பொறுப்பும் இல்லை என்பது மாதிரியும், ஒன்றும் தெரியாதது போன்று அமைதி காப்பது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இதுவும் முதல்வரை மிகவும் மனம் நோக செய்துள்ளது என்ற செய்தி வெளியாகியுள்ளது. அத்துடன் வடமாகாணசபை உறுப்பினர்கள் வட்டாரத்தில் மிகவும் வெறுப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்ற தகவலும் கிளம்பியுள்ளது.

இந்தக் கட்சிகளை பிரிக்கும் வேலைகளை, ரணில் ஒரு முழுநேர தொழிலாகவே செய்கின்றாறோ என்ற சந்தேகம் இப்போது நாடு முழுக்கவும் கிளம்பியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்காமல், அவருக்கு இரகசிய ஆதரவை வழங்கி, அதன்மூலம் சிறிலங்கா சுதந்திர கட்சியை பிளவு படுத்த ஐ.தே.க தலைமை முயற்சி செய்கிறது என சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சமீபத்தில் 'ஏசியன் மிரர்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் ரணில் விக்கிரமசிங்கவைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். முன்பு புலிகள் இயக்கம். தற்போது கூட்டமைப்பும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் என்று ரணிலின் பட்டியல் நீளுகின்றது.

தற்போது பிரதமரின் நேரடி கண்காணிப்பில் வடக்கு மாகாணத்துக்கு என ஒரு விசேட அதிகாரியை நியமிக்கப் போவதாக ரணில் கூறியுள்ளார். வடமாகாணசபையுடன் இணைந்து இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டால் அது வரவேற்கதக்கதாக இருந்திருக்கும். ஆனால், தன்னிச்சையாக வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பு, திவி நெகும சட்டமூலத்தை கொண்டு வந்து மாகாணசபை அதிகாரங்களில் தலையிட முயன்ற பசில் ராஜபக்சவின் முயற்சியை போன்ற ஒரு முயற்சியா? என பலத்த சந்தேகம் வடமாகாணசபை உறுப்பினர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த காலங்களில் ஆளுநர் சந்திரசிறி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரனின் நிர்வாகத்துக்கு சமாந்திரமாக இன்னொரு நிர்வாகத்தை நடத்தி வந்தார். இது ஒரு பாராதூரமான நிர்வாக பிரச்சனையாக இருந்தது மட்டுமல்ல, அதிகார பகிர்வு என்ற 13ம் திருத்தத்தையே கேலிக்கூத்தாக்கியது. இத்தகைய ஒரு முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரசிங்க இறங்கியுள்ளாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது உண்மையாக இருக்குமானால், ஐக்கிய தேசிய கட்சியும், ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல்ரீதியாக எதிர்வரும் தேர்தலில் பாரிய விலை கொடுக்க வேண்டி வரும் என்பதில் சந்தேகமில்லை.

**நன்றி. இணையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூயவழி காண்போம்



தொலைத்தொடர்பு
வலைத்தொடர்பு
மனிதகுல உச்சம்
தொண்டாற்றும்
மனங்களெல்லாம்
தொகுப்பாக வேண்டும்
தொலைவளர்ந்தோம்
ஒளியாண்டில் நாமுன்னே
அருகில்
தொலைத்தொடர்பை
விரும்புதற்போல்
முகம்கண்டு மகிழ்வோடு
தொலை கடந்தோம் பொருள்
விற்றோம்
கற்றுணர்த்தி வாழ்ந்தோம்
தொண்டாற்ற மனம்
விரிய சித்தநெறி நிற்போம்
தொலைக்கவில்லை
மறைந்துள்ள(து)
என்றெண்ணித் தேடி
தொகுத்துணர்ந்து
பகுத்துணர்ந்து
தூயவழி காண்போம்

-முத்து

## பிரிய இயலாத வலி



கண்களை
மூடுகின்றேன்
கண்ணீர்த்துளிகள்
நிறைந்து
பெருக்கெடுத்த படி
பேரருவியாய் என்
கன்னத்தில் வடிந்தபடி
தொண்டைக்குள் அடைப்பு
காதுமடல் வரை ஓர் சிவப்பு

அரித்தெடுக்கும்
மனவலியை
அழிக்க முடியாத
என் நிலமையை
தன்னந்தனியாய் நின்று
தள்ளாடுகிறேன்
துணைக்கு ஆள்
இன்றி திண்டாடுகின்றேன்

கண்களைத் திறந்தால்
கண்ணீரில் இருந்து
பிரிந்தால்
வெளியே வாழ்க்கை
எனக்காய் காத்து இருக்கின்றது
என்று அறிந்து இருந்தும்
வலியை என்னால்
பிரியமுடியவில்லை....!

-சொக்கன்னா

## காத்திருக்கிறது காதல்!



அழுது அரற்றும்
பெண்ணின் கண்ணீராய்
கரைந்து
ஒழுகிக்கொண்டிருக்கிறது
மேகப்பந்து

கரும் கம்பளம்
போர்த்தியதாய்
நீண்டு விரவியிருக்கிறது
இருள்

சரசரக்கும் செருப்பினால்
உறக்கம் கலைந்ததென
குரைத்து ஓய்கிறதொரு
நாய்

எண்ணெய் இட
மறந்ததை
சத்தமாய்
முறையிட்டு
வழிவிடுகிறது
வாசற்கதவு

வெகுநேரமாகி
வீடு திரும்பும்
எனக்காய்

கதவுக்கு
தலைசாயத் தந்து
காத்திருக்கும்
அவளின்
விழி வழிந்து
காத்திருக்கிறது
காதல்!

-ப்ரியன்

## ஒரு கிராமத்துக் காதலியின் ஏக்கம்

கணிணிப் பித்தனே...
இயந்திர வாழ்க்கைவிட்டு வெளியே வா..
சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம்..

முறையாய் ஒட்டப்பட்ட
உன் ஒற்றைவரி மடல் வராதாவென
வழியில் விழி கொண்டு
தபால்காரருக்கு ஏங்கிய சுகம்
இண்டர்நெட்டின் இ-மெயிலில் இல்லை...

கம்ப்யூட்டர்தானே நவீனமாய்..
காதலுமா??!!..
புறாக்கள் விடும் தூதை இரசித்தேன்..
யாகூவின் யாசித்தலை ஏற்க
மனம் ஒப்பவில்லை.

இயற்கை வயல்வெளியில்
மாராப்பு மடிப்பில் மறைத்து
மறுபடியும் மறுபடியும் படித்து
இனித்த சுகம்...
இயந்திர இ-மெயிலில் இல்லை..
கம்ப்யூட்டர் காலத்தைதானே வென்றது..
காதலையுமா?!!!

தென்னை ஓலையில்
பொக்கே செய்து..
செட்டி தோட்டத்து ரோஜாப்பூவை
ஒட்டி வைத்துத் தந்ததை
ஆற்றுச் சத்தத்தில்
பார்த்து ரசித்த சுகம்....

இ-கார்டு என இம்சையாய்
சத்தமெழுப்புகையில் இல்லை...
என் இதயக் காதலனே..
சுதந்திரக் காற்றை சுவாசிப்போம்..
இயந்திர வாழ்க்கைவிட்டு வெளியே வா...



-சுபோஜ்

## தவிக்கிறது நிலா



தெரியும் என்று
சொல்லிக்கொள்ளவோ,
தெரியாது என்று
சொல்லிக்கொள்ளவோ,
தெரியவில்லை..!
நடு நிசியில்,
நிசப்த ஓசையில்
தனித்து தவிக்கிறது
நிலவொன்று
நீ இல்லாத
என்னைப்
போலவே..!!

-ஜித்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**15.04.2015 ~21.04.2015**

**மேஷம்**



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இதனால், அஷ்டமச் சனியின் தாக்கம் பெருமளவில் குறையும். முக்கிய பணிகளில் சில நிறைவேறும். மனதில் நம்பிக்கை, தைரியம் வளரும். கண்களில் மலர்ச்சி உண்டாகும். வாகன பயன்பாடு அதிகரிக்கும். புத்திரரின் உடல்நலத்தில் கவனம் வேண்டும். குளறுபடியான செயல்கள் சரியாகும். இல்லறத்துணை, உங்களின் கவுரவம் வளர உதவுவார். தொழிலில் வளர்ச்சி, வருமானம் கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், கடமையை உணர்ந்து செயல்படுவர். மாணவர்களுக்கு, ஆசிரியரின் அறிவுரை, மனதில் நல்மாற்றம் தரும்.

**ரிஷபம்**



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

நடை, உடை, செயலில் வசீகர மாற்றம் ஏற்படும். இடம் அறிந்து பேசுவது நல்லது. அதிக விலையுள்ள பொருட்களை கவனமுடன் பாதுகாக்கவும். புத்திரர் மனதில் நம்பிக்கையை வளருங்கள். எதிர்ப்புகளால் வரும் சிரமத்தை சரிசெய்வீர்கள். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்கவும். பணியாளர்கள், தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.

**மிதுனம்**



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சுயகௌரவம் பாதுகாக்கும் வகையில் செயல்படுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும். அரசு உதவி கிடைத்து, மனதில் நம்பிக்கை வளரும். புதிய வாகனம் வாங்க பணவரவு கிடைக்கும். புத்திரர், உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வர். வழக்கில் சுமுகத்தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை, கருத்து வேற்றுமை கொள்வார். தொழிலில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு, பணசேமிப்பு கூடும். பெண்கள், வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள், நன்றாக படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

**கடகம்**



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

நல்ல முயற்சி, முழு அளவில் வெற்றியை தரும். புத்திரர் அறிவு, வேலைத்திறனில் முன்னேற்றம் அடைவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை, உதவிக்கரமாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு, சலுகை உண்டு. பெண்கள், உறவினர் குடும்ப மங்கல நிகழ்ச்சிக்கு உதவுவர்.

**சிம்மம்**



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். தாழ்வு மனப்பான்மை விலக்குவதால், முக்கியமான பணி நிறைவேற்றலாம். புத்திரரின் உடல்நலத்திற்கு சிகிச்சை உதவும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம். ல பணியாளர்கள், கடமையில் கண்ணும், கருத்துமாக செயல்படவும். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**கன்னி**



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. பணியாளர்கள், மனநிம்மதியுடன் பணிபுரிவர். புத்திரர், நல்ல செயல்களால் பெருமை தேடித்தருவர். பித்தம், கபம் உடலில் கூடுவதால் பிணி ஏற்படலாம். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித்தருவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதியவர்களின் வருகை துணை நிற்கும்.

**துலாம்**



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

எதிர்ப்பாளரின் கெடு செயலை, தெய்வ வழிபாட்டின் மூலம் சரி செய்யுங்கள். இல்லறத்துணையின் ஆலோசனை, நம்பிக்கை தரும். கூடுதல் கண்காணிப்பு உழைப்பினால் தொழில், வியாபாரம் சீராகும். இயந்திரப்பிரிவு பணியாளர்கள், தவறாமல் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**விருச்சிகம்**



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரர், ஆன்மிக கருத்து அறிவதில் ஆர்வம் கொள்வர். இல்லறத்துணை மனதில், நம்பிக்கைக்கு குறை வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு, தாமதமான சலுகை வந்து சேரும். குடும்ப பெண்கள், உறவினர் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள், அதிக பயன் தராத பொருளை வாங்க வேண்டாம்.

**தனுசு**



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

நிகழ்வுகளின் போக்கு உணர்ந்து, பொறுமையுடன் செயல்படுவது நல்லது. பணச்செலவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுடன் மனக்கிலேசம் ஏற்படும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் சேர்க்கை சகவாசத்தை கண்காணிப்பது அவசியம். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம். இல்லறத்துணையின் பேச்சு, செயல் குளறுபடியாகும். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் குறைப்பதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**மகரம்**



**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

பெண் தெய்வ அருள்பலம், பலவித நன்மையை உருவாக்கும். எதிரி, மறைமுகமாக உதவி பெற முயற்சிப்பர். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பண சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள், இயன்ற அளவில் தான, தர்மம் செய்வர். மாணவர்களுக்கு, கலைகளில் ஆர்வம் வளரும்.

**கும்பம்**



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

சமூகத்தில் அந்தஸ்து பெருகும். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். வீடு, வாகனத்தின் பயன்பாடு, மனதில் நிம்மதி தரும். புத்திரர், இனம் புரியாத குழப்பம் அடைவர். எதிர்ப்பாளர் விலகுவர். இல்லறத்துணை வழியில் புதிய சொந்தங்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை படிப்படியாக முன்னேற்றம் பெறும். பணியாளர்கள், அதிக பொறுப்புணர்வை பின்பற்றவும். பெண்கள், பணம் சேமிப்பர். மாணவர்கள், படிப்பில் புதிய பயிற்சி முறையை பின்பற்றுவர்.

**மீனம்**



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர், நண்பருக்கு இணையாக பழகுவர். உடல் ஆரோக்கியம் பெற, மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை ஒற்றுமை கொள்வார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்வீர்கள். பணியாளர்கள், எதிர்கால நலனை கருத்தில் கொள்வர். பெண்கள், காலமுறை உணவுப் பழக்கத்தை பின்பற்றவும். மாணவர்கள், நண்பரின் குறையை வெளிப்படையாக சொல்ல வேண்டாம்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 82



நீர்ப்பம்பியை அழுக்கி, நீர் பிடிக்க வேண்டும். பெண்ணின் நேரத்தை உறிஞ்சி, பொறுமையைச் சோதிக்கும் சடங்கு இது. கோடைக்காலத்தில் , உள்ளூர்ச் சமூகத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நீர் விநியோகம் போதாதிருக்கும். அப்போது, அந்தச் சுற்றுப் புறத்தில் உள்ள வேறு நீர்க்குழாயைத் தேடும் நீர்ப்பந்தம் பெண்களுடையதாகவே இருக்கும். தண்ணீர் தேடிக் கூட்டம் கூட்டமாகச் செல்லும் பெண்கள், அடிக்கடி எமது வீட்டு முன் வாயிலில் நின்று, முன் வளவுக்குள் இருக்கும் நீர்குழாயில் நீர் பிடிக்க அனுமதி கோருவார்கள். கோடையில் மத்திய தர வர்க்கத்தினரும் நீர்த்தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டு, நீருக்காகத் தேடுதலில் ஈடுபடுவர். இல்லையென்றால் அந்தப் பக்கம் நீர் வழங்க வரும் நீர் வண்டிக்காக காத்து நிற்பார்.

போதுமான அளவு சுத்தமான நீர் கிடைப்பது இந்தியாவில் பெரும் பிரச்சினையே . கிராமப்புறத்தில் ஒரு சில குடம் குடி நீருக்காக பெண்கள் நீண்ட தூரம் நடந்து செல்வது பொதுவானது. தமிழ் நாட்டுக்கு நாம் முதலில் சென்ற போதே, சென்னையின் வாழ்க்கைத்தரத்தையும் , தன்மையையும் தண்ணீரே நிர்ணயிப்பதை நாம் புரிந்து கொண்டோம். ஆகவே தமிழ் நாட்டுக்கு நாம் சென்று அங்கே நிரந்தரமாக வாழ்வதற்கு வீடு தேடும் போது,அந்தப் பகுதியின் நீர் விநியோகம் பற்றி விசாரிப்பதும் எமக்கு முக்கியமானதாக இருந்தது. இந்தச் சமூகப் பிரச்சினை பற்றிய அறிவுடனே வீடு தேடியதால் , வீட்டின் அடிப்படைத் தேவைக்காகத் தலையைப் பிய்க்கும் சிரமம் எனக்கு ஏற்படவில்லை. ஆனால் குண்டு வெடித்த பிறகு கிடைத்த வீடு அமைந்த இடத்தில் நீர் விநியோகம் குறைவாகவும், நிலையற்றதாகவும் இருந்தது. ஆகவே, புதிய வீட்டுக்கு இடம் மாறிய பின், நீர் தொடர்பான பல பிரச்சினைகள் , என் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கத் தொடங்கின.

வீட்டின் முன் வளவுக்குள் கையால் அழுக்கும் நீர்க்குழாய்ப் பம்பி இருப்பது பெரும் வசதி என்று நான் கருதிய போதும், கோடைக்கால வெப்பம் அதிகரித்துச் செல்ல, நீர் விநியோகம் வருவதும் நிற்பதுமாகத் தொடங்கி, இறுதியில் படிப்படியாக இல்லாது போகும் நிலையை எய்தியது. கோடைகாலத் தொடக்கத்திலே எமது வீட்டு நீர் விநியோகம் நாளுக்கு அரைமணிநேரமாகக் குறைக்கப்பட்டது. அந்த நேரத்துக்குள் நீர்ப் பம்பியைக் கையால் அழுக்கி , அன்றைய வீட்டுத் தேவைக்கான நீரை, குடங்கள் எல்லாவற்றிலும் நிரப்பி விடுவேன். சமையல் கட்டிலோ, குளியல் அறையிலோ , குழாயில் நீர் வராது . குழாய் நீர் இல்லாது போன போது ஓர் இயற்கையான அன்றாட அவசியத் தேவை மறுக்கப்பட்டதை உணர்ந்தேன். அது எமது வாழ்க்கை முறையையும் , தரத்தையும் வெகுவாகப் பாதிக்கிறது என்பதையும் முழுமையாக உணர்ந்தேன். நீர் கிடைக்காது இருப்பது அப்படி என்ன பிரச்சினை என்று நினைப்பவர்களுக்குக் கூட , அதற்கு முகம் கொடுக்கும் போது தான், அது எத்தகைய பெரிய பிரச்சினை என்பதும், நீரை எப்படி சேமிப்பது என்று சதா சிந்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதும் புரியும். சமையலுக்காக ஒதுக்கும் ஒரு வாளி நீரை எப்படிச் சேமித்து, அதில் சமையலுக்கு எவ்வளவு நீர், பாத்திரங்களைக் கழுவ எவ்வளவு நீர் என்று கவனமாக இருப்பதே தலையைக் குடையும். குறைந்த பட்ச நீரில் எப்படிப்பாத்திரங்களைக் கழுவலாம்.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-புருஜோத்தமன் தங்கமயில்

# தேன்நிலவின் முடிவு



# மைத்திரியின் ஆதங்கம்

**மை**த்திரி அரசாங்கத்தின் தேன்நிலவுக்காலம் முடிவுக்கு வருகின்றது. நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இணக்கமும் பிணைப்பும் விரிசலாகி நம்பிக்கையீனங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. பெரும் காதலோடு, தாம் ஆட்சியில் அமர்த்திய அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை மக்கள் வெளிப்படையாக வெளியிடாத போதிலும், அதன் அளவு நிச்சயமாக அதிர்ச்சியளிக்கக் கூடியது தான்.

பெரும் அடக்குமுறைக்கும் அண்டலுக்கும் உள்ளாகியிருந்த நாட்டு மக்களுக்கு, மைத்திரிபால சிறிசேனவின் வருகை சிறு ஒளிக்கீற்றாகவே ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தென்பட்டது. அந்த ஒளிக்கீற்றின் நீட்சிக்காலம் பற்றி மக்கள் அப்போது கவனத்திற் கொள்ளவில்லை. ஏனெனில், அதற்கான அவகாசமோ, மாற்று மீட்சிப் புள்ளிகளோ அப்போது இருக்கவில்லை.

> **ஒளிக்கீற்றாக மக்களினால் கருதப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே, தன்னுடைய அரசாங்கத்தின் வீழ்ச்சியை உணர்ந்து கொண்டுவிட்டார். அதுதான், அவரை 'அப்பி பஹினவா (நாங்கள் இறங்குவோம்)' என்கிற தொனியினூடு அரசாங்கத்தின் வீழ்ச்சி பற்றி தேசிய நிறைவேற்று சபைக் கூட்டத்தில் ஆதங்கம் வெளியிட வைத்திருக்கின்றது.**

ஒளிக்கீற்றாக மக்களினால் கருதப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே, தன்னுடைய அரசாங்கத்தின் வீழ்ச்சியை உணர்ந்து கொண்டுவிட்டார். அதுதான், அவரை 'அப்பி பஹினவா (நாங்கள் இறங்குவோம்)' என்கிற தொனியினூடு அரசாங்கத்தின் வீழ்ச்சி பற்றி தேசிய நிறைவேற்று சபைக் கூட்டத்தில் ஆதங்கம் வெளியிட வைத்திருக்கின்றது.

எந்தவொரு இலக்கினை நோக்கிய பயணமும் சிரமம் நிறைந்ததுதான். ஆனால், ஆரம்ப கட்டப் பயணம் இலகுவானது போலவே தோன்றும். அப்படித்தான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கத்தை அமைத்த தருணத்திலும் நம்பினார். ஆனால், இரண்டாவது கட்டத்தை அடைவது தொடர்பில் அவர் சிந்தித்த போது, அனைத்து முட்டுக்கட்டைகளும் வழி மறித்தன. இப்போது, 'இலக்கு' எது என்பது தொடர்பில் அவருக்கே குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இப்போதுதான் அவர் உண்மையான சிக்கல்களையும் முடிச்சுக்களையும் அவிழ்க்க வேண்டியிருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் மாற்றங்களைச் செய்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்குதல், தேர்தல் முறை மாற்றம், ஊழல் மோசடிகளுக்கு எதிரான விசாரணை, வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருதல், பிராந்திய நாடுகளுடனான நெருக்கத்தைப் பேணுதல், நம்பிக்கையீனங்களினால் சூழப்பட்டிருக்கும் மக்களை மீட்டெடுத்தல் என்று மைத்திரிபால சிறிசேனவின் முன்னால் பல இலக்குகள் உண்டு. ஒவ்வொரு இலக்கும் அவ்வளவு தடைகளைத் தாண்டியே அடையப்பட வேண்டியது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் மாற்றம் செய்யும் 19ஆவது திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நீதிமன்ற வியாக்கியானத்துக்காக கையளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் உள்ளதாக சுட்டிக்காட்டி அரசாங்கத்தின் பங்காளிகளே நீதிமன்றத்தை நாடியிருக்கின்றார்கள். அதிலும், தேசிய அரசாங்கத்தில் வேண்டா வெறுப்பாக இணைந்திருக்கின்ற (அல்லது இணைத்துக் கொள்ளப்பட்ட) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தேர்தல் முறை மாற்றத்தைச் செய்யாமல், 19ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கப் போவதில்லை என்கிற நிலையில் இருக்கின்றது.

ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்து, நாடாளுமன்றத்துக்கு (பிரதமருக்கு) அதிகாரங்களை வழங்கும் திட்டத்தை மாத்திரமே நிறைவேற்ற வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மிகவும் தீர்க்கமான முடிவோடு இருக்கின்றார்கள். எவ்வளவு எதிர்ப்புக்கள் வந்தாலும் அதனை காலப் போக்கில் கடந்துவிடலாம் என்கிற தோரணையில் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார். 19ஆவது திருத்த வரைவின் மீது பல தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்தாலும் அதற்கான எதிர்வினைகளை பிரதமரோ, ஐக்கிய தேசியக் கட்சியோ வெளிப்படையாக முன்வைப்பதில்லை. மாறாக, அமைதிகாக்கின்றனர்.

தேர்தல் முறை மாற்றத்தை ஆரம்பத்தில் விரும்பியது போல ஐக்கிய தேசியக் கட்சி காட்டிக் கொண்டாலும் அதனை விரைவாக நிறைவேற்றுவதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில், வரும் நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறையில் இருந்தாலே தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்த உதவும் என்று நம்புகின்றது. தொகுதிவாரியை அதிகம் முன்னிறுத்தும் தேர்தல் முறைமைக்கு உடனடியாகச் சென்றால் தென்னிலங்கையின் கிராமங்களை வெற்றி கொள்ள முடியாது என்பது அதற்கான காரணம். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி என்பது கடற்கரை ஓரங்களையும் நகரங்களையும் அண்மித்தே எப்போதும் இருந்து வந்திருக்கின்றது.

அதுபோல, தொகுதிவாரி முறைமை சிறுபான்மைக் கட்சிகளையும் குறிப்பிட்டளவில் பாதிக்கும். அதுவும் கூட நாடாளுமன்றத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவினை இல்லாமல்செய்யும். இப்படியான நிலையில், அரசாங்கமொன்றை அமைத்தாலும் அது அறுதிப் பெரும்பான்மையின்றி அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் சூழல் உருவாகலாம். அதனையே, ரணில் விக்கிரமசிங்க அதிகமாக கருத்தில்கொள்கின்றார்.

தொகுதிவாரியை அதிகம் முன்னிறுத்தும் தேர்தல் முறை மாற்றத்தினால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய பிரதான கட்சிகளே அதிக நன்மையைப் பெறமுடியும். மற்றைய சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும் சிறுபான்மையினக் கட்சிகளும் பாரிய பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அம்பாறையைத் தவிர மற்றைய மாவட்டங்களில் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும். மலையகக் கட்சிகளும் இப்போதுள்ள நிலையோடு ஒப்பிடுகின்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியைச் சந்திக்கும். அதுபோல, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பாரிய பின்னடைவைச் சந்திக்கும். ஏனெனில், தனித்த ஒரு தொகுதியை வெற்றி கொள்ளும் அளவுக்கான வாக்கு வங்கி அந்தக் கட்சியிடம் இல்லை. அது, சேர்க்கப்படும் வாக்குகளின் போக்கில் வெற்றியைப் பெறும் கட்சியாகவே இருக்கின்றது.

தேர்தல் முறை மாற்றத்தின் பின்னணியில் இவ்வளவு விடயங்கள் இருக்கின்றன. அதுதான், அதனை உடனடியாக முன்னிறுத்துவதில், குறிப்பாக அடுத்த பொதுத் தேர்தலை அப்படி நடத்துவதை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. ஆனால், தேர்தல் முறை மாற்றமே தம்மைத் தக்க வைக்க உதவும் என்று சுதாகரித்துக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதனைப் பிடித்துக் கொண்டுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், தேர்தல் முறை மாற்றம் எனும் தடையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த அல்லோலகல்லோல நிலைமை தொடர்ந்து வரும் நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையான கருத்துக்கள் எதனையும் வெளியிடாமல் அமைதி காக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமைதி காத்தலுக்குப் பின்னாலுள்ள விடயங்களை அவ்வளவுக்கு புரிந்து கொள்ள முடியவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அவர் பதவியேற்றுக் கொண்டாலும், அவருக்கான ஆதரவு என்பது சிரேஷ்ட

**(22ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபக்கார மாமியா ?

## அப்படியானால் இதைப் படியுங்கள்

திருமணத்துக்கு பின்னர் புகுந்த வீட்டுக்கு காலடி எடுத்து வைக்கும் பெண்கள் ஒரு வித எதிர்பார்ப்போடு தான் செல்வார்கள்.

தாய் வீட்டில் செல்லமகளாக வளர்ந்துவிட்டு, புகுந்த வீட்டுக்குச் செல்லும்போது, சந்திக்கும் புது உறவுகளை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்ற தயக்கம் இருக்கும்.

கணவன்மார்களுக்கும் தங்கள் துணையின் மேல் ஒருவித எதிர்பார்ப்பு இருக்கும். அதே போன்று, வீட்டுக்கு வரும் மருமகள் புகுந்த வீட்டில் நல்லுறவை ஏற்படுத்துவாள் என்று ஒவ்வொரு மாமியாரும் நம்புவார்கள். ஆனால், ஒரு சில வீட்டில் ஒற்றுமை இருந் தாலும், பலரது வீட்டில் வேற்றுமையே மேலோங்கும்.

ஒரு நல்ல மருமகள் வீட்டை சரிசமமாக கையாண்டு சிறந்த வழியில் கொண்டு செல்ல லாம். வேறொரு குடும்பத்தில் இருந்து வந்து, புதிய மனிதர்களிடமும், புதிய குடும்பத்திலும் அனுசரித்து போவதற்கு சில காலம் தேவைப் படும்.

நமது குடும்பத்தை சரிசமமாகவும், நல்முறை யில் வழிநடத்தவும், நாம் புகுந்த வீட்டில் சண்டைகளை தவிர்க்க வேண்டும். சந்தர்ப்பத்தை புரிந்து கொண்டு நடப்பதால், வாழ்க்கையை நல்ல முறையில் வாழலாம். சந்தர்ப்பங்களை புரிந்து கொள் ளாமல், கோபமாக கையாண்டால் மாமியார், மருமகள் உறவில் விரிசல் ஏற் படலாம்.

உங்கள் கணவரை நல்ல ஒரு மனிதராக வளர்த்ததற்காக அவரது பெற்றோர்களை பாராட்டுங்கள்.

அவர்கள் உங்கள் கணவரை வளர்ப்பதற்காக பட்ட கஷ்டங்களை ஏற்றுகொள்ளுங்கள். இது அவர்களுக்கு நிச்சயமாக ஒரு இனிமையான உணர்வை கொண்டு வரலாம்.

திருமண வாழ்க்கையில் சண்டைகள் வருவது பொதுவான ஒன்றாகும். உங்கள் கணவரிடம் சண்டை ஏற்பட்டால் தேவை இல்லாமல் அவர்களது பெற்றோரை இழுக்கக்கூடாது.

இதுவே அவர்களோடு சண்டை ஏற்படுவதை தவிர்க்கும். ஒரு நல்ல மருமகளாக அவர்களின் உணர்ச்சிகளையும் பாதுகாப்பையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல மருமகள் தனது மாமியாருக்கு எப்பொழுதுமே நல்ல தோழியாகவே இருப்பார். எனவே உங்கள் மாமியாரை தோழியாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை சந்தோஷமாக வாழுங்கள்.





# திருமண வாழ்க்கை சந்தோஷமாக அமைய ஆலோசனைகள்

திருமண வாழ்க்கை சந்தோஷமாகவே தொடங்குகிறது. அது இறுதிவரை சந்தோஷமாக இருப்பது மணமக்கள் கைகளில் தான் இருக்கிறது. இன்றைய இளைய தலைமுறையினர் தாம் தெளிவாக இருப்பதுபோல காட்டிக் கொள்வதற்காக ஆளாளுக்கு நிபந்தனை போட்டு விடுகிறார்கள்.

ஆனால் விட்டுக்கொடுத்து வாழ்வதில்தான் வாழ்க்கை இருக்கிறது என்பது இருவரில் ஒருவருக்காவது புரிந்தால்தான் வாழ்க்கை நிலைத்திருக்கும். மண வாழ்வை முறித்துக் கொள்வதற்கு எத்தனை காரணங்கள் வேண்டு மானாலும் கூறலாம். ஆனால் உறவு நீடிக்க எல்லையற்ற அன்பு காட்டுவது ஒன்றுதான் வழி.

இன்று பல தம்பதியர் குடும்ப வாழ்க்கையை ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்காக சிரித்து வாழ்கிறார்களே தவிர, உண்மையான பரிசுத்தமான ஆனந்தத்தில் அவர்கள் புன்னகை பூக்கவில்லை.

பிரம்மச்சாரிகளைவிட குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களே அதிக ஆயுளுடன் வாழ்கிறார்கள் என்று ஒரு ஆராய்ச்சியே செய்து நிரூபித்து இருக்கிறார்கள் என்பதை எல்லா தம்பதியரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த மனிதப் பிறவி ஆனந்தமாக வாழ வேண்டும் என்பதற்குத்தான். சொத்து, பணத்துக்காக வாழ்வதற்கும், எதற்கெடுத்தாலும் கோபப்பட்டு ஆனந்தத்தை தொலைப்பதற்கும் யாரும் பிறவி எடுக்கவில்லை.

முடிந்தவரை எல்லோரும் ஆனந்தமாக இருக்க முயற்சி செய்யுங்கள். தாம்பத்திய வாழ்க்கையில் ஆனந்தமாக இருந்தால், மற்ற எல்லாவித ஆனந்தங்களும் வந்து சேரும். இதையும்கூட ஆய்வு செய்து நிரூபித்து இருக்கிறார்கள்.

திருமணத்துக்கு முன்பு கொஞ்சம் தனியாகப் பேசுவோம் என்னும்போதே இவர் இப்படித்தான் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள் பலர். எல்லோருக்குள்ளும் எதிர்பார்ப்பு, இலட்சியம், ஆசை, கோபம் அனைத்தும் இருக்கும் என்பதை மறந்து விட்டு ,எனக்கு இவர் வேண்டாம் என்று சொல்லி விடுகிறார்கள். கேள்வி கேட்பது, நிபந்தனை விதிப்பது மட்டுமல்லாமல் சந்தித்து பேசும்போதே தங்களின் முக்கியமான எதிர்பார்ப்புகளையும், சந்தேகங்களையும் தெளிவுபடுத்த வேண்டும். திருமணத்தை சுமையாக எண்ணாமல், புனிதமானதாக எண்ணுங்கள். இயல்பாக வாழ்வைத் தொடங்குங்கள்.

அப்பா அம்மா சொன்னார்கள் என்பதற்காக கழுத்தை நீட்டி விடக்கூடாது. வாழப்போகும் நீங்கள் வரப்போகிறவர் குணநலன்களோடு சமன்பட்டு வாழ முடியுமா? என்பதைப் புரிந்து கொண்டு முடிவை அறிவியுங்கள்.

திருமணம் செய்துவிட்டால் இருவருமே ஒருவருக்கொருவர் நம்பிக்கைக்குரியவராக வாழ்தல் வேண்டும். இருவருமே ஆசையில் ஒன்று கூடுவதுபோல இலட்சிய பயணத்தில் மற்றவர் பாதையில் தடையாக இல்லாமல் துணையாக இருப்பது அவசியம். அதுவே மகிழ்ச்சியான வாழ்வுக்கு அத்திவாரமாக அமையும்.

குறைகளை மறைத்துத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. அது எப்போது வேண்டுமானாலும் பூதாகாரமான பிரச்சினையை ஏற்படுத்தும். மணமக்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் திருமண பந்தத்துக்குத் தயாராக வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களை பெரிது படுத்தாமல் சிக்கல்களை தீர்ப்பதில் மட்டுமே திறமையைக் காட்ட வேண்டும். சிக்கல்கள், சிரமங்கள், சவால்கள் போன்ற வாழ்வியல் யதார்த்தங்களை புரிந்து கொண்டால் அவற்றை எளிதாக எதிர்கொள்ளலாம். வாழ்வு முழுவதும் வசந்தமாகும் குடும்ப வாழ்க்கை.

நண்பர்களின் வேடிக்கைப் பேச்சும், திருமண பகிடிகளும் திருமணம் கஷ்டமான விஷயம் என்பது போல்தான் காட்டப்படுகிறது. ஆனால் யதார்த்தத்தில் அப்படிக் கிடையாது. பகிடியை நம்பி மனைவி தாயார் வீட்டுக்குச் சென்றிருப்பது சுகமான தருணம் என்று எண்ணுவதும், பேசுவதும் கூடாது. கருத்து வேற்றுமையின் போது தவறுகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தால் எல்லாம் பூதாகரமாகத் தோன்றும். தடுமாற வைத்துவிடும். இல்லறத்தில் காலம் முழுக்க இணைந்திருப்பேன் என்று உறுதி ஏற்று செயல்பட்டால் அன்பும், விட்டுக்கொடுத்தலும் இயல்பாக வந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

மருத்துவக் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்கள். மிகுந்த குதூகலத்துடன் அன்று இருந்தார்கள். காரணம் அன்று தான் அவர்கள் முதல் முதலாக சத்திர சிகிச்சை அறைக்குள் நுழைந்திருந்தார்கள். பாரதூரமான சத்திரசிகிச்சை அல்ல. சாதாரண ஹேர்ணியா நோய்தான். சத்திரசிகிச்சை நிபுணர் நோய் பற்றிய




விளக்கங்களை மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டு. கத்தியைக் கையில் எடுத்தார்.

வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த நோயாளியின் அடிவயிறு மட்டும் வெளியே தெரிந்தது. ஒரு கீறு!.

இரத்தம் கசிந்தது.

உதவியாளர் அதை ஒற்றி எடுக்க முனையும்போது 'பொத்தடீர்' என ஒரு சத்தம்.!!

பார்க்க வந்த மாணவர்களில் ஒருவன் திடீரென மயங்கிவிழுந்து விட்டான்.

பாடசாலையில் காலை வழிபாட்டு நேரம். ஆசிரியர் திருவாசகத்தில் திளைத்து தன்னை மறந்து நேரம்போவது தெரியாது பேசிக் கொண்டிருக்கையில் ஒரு மாணவி பொத்தென விழுந்துவிட்டாள்.

அதேபோல இராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்கும்போது விழுவதும் உண்டு.

படுக்கையிலிருந்து திடீரென எழும் போது மயங்குதல், திடீரெனத் திரும்பிப் பார்க்கையில் விழுதல், சாமிக்கு வைப்பதற்காக பூ கொய்வதற்காக கழுத்தை நிமிர்த்தியபோது திடீரென விழுதல் போன்ற பல்வேறு உதாரணங்களையும் குறிப்பிடலாம்.

### திடீர் மயக்கங்கள்

இவை எல்லாம் திடீர் மயக்கங்கள். மயங்கி விழுந்த வேகத்திலேயே மயக்கம் தெளிந்துவிடுவார்கள். இத்தகைய மயக்கம் தீவிரமான நோய்களின் அறிகுறிகள் அல்ல. பக்கவாதமோ வலிப்பு நோயோ அல்ல.

மருத்துவத்தில் syncope எனச் சொல்லப்படும் இவை கணநேரம் மூளைக்கச் செல்லும் ஒட்சிசன் குறைவதால் ஏற்படுவதாகும். Black out எனப் பொதுவாகச் சொல்லுவார்கள்.

'இருட்டிக் கொண்டு வந்தது', 'என்ன நடந்தது எனத் தெரியாது திடீரென விழுந்துவிட்டேன்' என எம்மவர்கள் சொல்லுவார்கள். திடீர் மயக்கம் என நாம் சொல்லலாம்.

இத் திடீர் மயக்கங்கள் பெரும்பாலும் எதிர்பாராது வரும். சிலருக்கு வியர்த்துக் கொண்டோ அல்லது வாந்தியுடன் வரலாம். சில கணங்களுக்குள் விழுந்தவர் தானே விழித்து எழுந்து விடுவார். இவர்களில் பெரும்பாலனர்கள் மற்றவர்களின் எந்த உதவியும் இன்றி தாமாகவே எழுந்து தமது அலுவலைத் தொடரக் கூடியதாக இருக்கும்.

பொதுவான சனத்தொகையில் பத்தில் நான்கு பேருக்கு இத்தகைய மயக்கம் தமது வாழ்நாளில் ஒருமுறையாவது ஏற்பட்டிருக்கும் என்கிறார்கள்.

இவ்வாறன மயக்கம் ஒருவருக்கு 40 வயதிற்கு முற்பட்ட காலத்திலேயே முதன்முறையாக வரும். 40 வயதிற்கு பின்னர்தான் முதன் முறையாக ஒருவருக்கு இப் பிரச்சனை ஏற்படுகிறது எனில் அது சற்று தீவிரமான நோயின் வெளிப்பாடாக இருக்கலாம்.

பெரும்பாலும் பதின்ம வயதுகளிலேயே முதல் முதலாக வருகிறது. பையன்களை விட பெண் பிள்ளைகளில் வருவது அதிகம்.

### காரணங்கள் எவை

பெரும்பாலன இத்தகைய மயங்கங்கள் நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டவையே கடுமையான வலி, மன அழுத்தம், பயம், தீவிர உடற் பயிற்சியின் போன்றவற்றின் போது நிகழ்கின்றன. கடுமையான வாந்தியின்போதும் வருவதுண்டு.

பொதுவாக முகம் வெளிறுவதுடன் வியர்வையும் சேர்ந்து வரலாம். பெரும்பாலானவர்களுக்கு அந்நேரத்திலும் கண்கள் திறந்து இருக்கும். மருத்துவ மாணவன் மயங்கி விழுந்ததற்குக் காரணம் முதன் முறையாக இரத்தம் வெளியேறுவதைக் கண்ட அதிர்ச்சியே ஆகும். அதே மாணவன் பின்னர் திறமையான சத்திரசிகிச்சை நிபுணராக புகழ் பெற்றது ஆச்சரியமான விடயமல்ல.




மற்றொரு முக்கிய காரணம் திடீரென ஒருவரின் இரத்த அழுத்தம் குறைவதால் ஆகும். படுக்கை நிலையில் இருந்து எழுந்திருக்கும்போது அல்லது உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நிற்கும்போது திடீரென ஒருவரது இரத்த அழுத்தம் குறைவதுண்டு.

இதை நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் (Postural hypotension) என்பர். நீண்ட நேரம் ஒரே இடத்தில் கால்களை அசைக்காது நிற்கும்போதும் இரத்த ஓட்டம் குறைவடைவதால் அவ்வாறு இரத்த அழுத்தம் குறையக் கூடும். பாடசாலை மாணவி விழுந்தது அவ்வாறே ஆகும்.

வயதானவர்களில் இவ்வாறு நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு பல மருந்துகள் காரணமாக இருப்பதுண்டு.

உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க பயன்படுத்தப்படும் Prazosin, HCT, Atenolol, propranolol போன்றவை முக்கியமானவை.

அதே போல மனச் சோர்விற்க்கு உபயோகிக்கும் doxepin, imipramine, Amitriptyline போன்றவையும்.

ஆண்குறி விறைப்படைதலை ஊக்குவிக்கும் Sildenafil , tadalafil மருந்துகளும் நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தத்தை ஏற்படுத்துவதால் சில தருணங்களில் திடீர் மயக்கத்தைக் கொண்டுவருவதுண்டு.

மலத்தை கடுமையாக முக்கி வெளியேற்றும் போது மூச்சை அடக்குவதால் இவ்வாறான மயக்கம் நேரலாம்.

கடுமையான காய்ச்சல், கடுமையான வயிற்றோட்டம் போன்ற நோய்களால் உடலின் நீர்த்தன்மை குறைவதாலும் மயக்கம் ஏற்படுவதைக் காண்கிறோம்.

குக்கல் போன்ற கடுமையான இருமலின் போது, மூச்சு விடமுடியாது இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைவதாலும் ஏற்படுவதுண்டு.

கடுமையான வரட்சியால் வியர்வை அதிகம் வெளியேறுவதால் உடலிலுள்ள நீரின் தன்மை குறையும்போதும் இந்நிலை ஏற்படலாம்.

### தீவிரமான வேறு நோய்கள்

சற்று தீவிரமான வேறு நோய்களாலும் இவ்வாறான மயக்கங்கள் ஏற்படலாம்.

முக்கியமானது வலிப்பு நோயாகும். இதன்போது பொதுவாக மயக்கம் மட்டுமின்றி கை கால்களை இழுப்பதும் நடக்கும். ஆனால் அவ்வாறான இழுப்பு இல்லாத வலிப்புகளும் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திடீரென இரத்தத்தில் சீனியின் அளவு குறையும்போதும் மயக்கம் ஏற்படுவதுண்டு. இது நீரிழிவு நோயுடன் தொடர்புடையது. நீரிழிவு நோய்க்காக இன்சுலின் ஊசி, அல்லது மாத்திரைகள் எடுப்பவர்களிடையே

தினமும் எடுக்கும் மாத்திரை அல்லது ஊசியின் அளவை தவறுதலாக கூடுதலாக எடுத்தால் நடக்கலாம்.

அவர்கள் விரதங்கள் இருப்பதாலும் நேரலாம். நீரிழிவு நோயாளிகள் விரதங்கள் இருப்பதும் உணவுகளைத் தவறவிடுவதும் கூடாது.

திடீரென ஏற்படும் அதிகமான இரத்தப் பெருக்கு மற்றொரு காரணமாகும். உதாரணமாக காயத்தினால் கடுமையாக குருதி வெளியேறுவது, கடுமையான மாதவிடாய் பெருக்கு, மூலத்திலிருந்து திடீரென இரத்தம் ஓடுதல் மற்றும் வெளிப்படையாகத் தெரியாது உடலின் உள்ளே நடக்கும் குருதிப்பெருக்குகள் காரணமாகவும் நடக்கலாம். உதாரணமாக- குடற்புண், ஈரல் சிதைவு, புற்றுநோய்கள் எனப் பலவாகும்.

தலையில் கடுமையான அடி படுதல், அதிகமாக மது அருந்துதல், திடீரெனத் தோன்றி மறையும் பக்கவாதம் (transient ischaemic attacks) போன்றவை வேறு முக்கிய காரணங்களாகும்.

எனவே காரணம் எதுவாக இருந்தாலும் திடீர் மயக்கம் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவதன் மூலம் அது ஆபத்தான நோயின் வெளிப்பாடு அல்ல என்பதை நிச்சயத்துக் கொள்ளலாம்.

உங்கள் வீட்டில் ஒருவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டால் மேற் கூறிய எவையாவது காரணமாக இருக்கக் கூடும்.

மருத்துவரிடம் செல்லும்போது, இவற்றில் ஏதாவது காரணமாகலாம் என நீங்கள் சந்தேகித்தால் அவரிடம் மறக்காமல் சொல்லுங்கள்.

மயக்கமுற்றவர் வழமையாக உட்கொள்ளும் மருந்துகள், அவற்றின் அளவுகள் ஆகியவற்றையும் மருத்துவருக்கு அறியத்தாருங்கள்.

### மருத்துவம்

சாதாரண மயக்கங்கள் தாமாகவே குணமாகிவிடும் என்பதை அறிந்தோம்.

மயக்கங்களுக்கு வேறு காரணங்கள் இருப்பின் அவற்றைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய மருத்துவர் வழி கூறுவார்.

மயக்கம் வருவது போலிருந்தால் என்ன செய்யலாம்.

நிற்கவோ இருக்கவோ செய்யாது உடனடியாக அந்த இடத்திலேயே படுங்கள். முடியுமானால் கால்களை ஒரு நாற்காலியில் உயர்த்தி வையுங்கள்.

மயக்கம் தெளிந்தாலும் உடனடியாக திடீரென எழுந்து நிற்காதீர்கள். சற்று தலையை உயர்த்தி உட்கார்ந்து பாருங்கள். சுகமாக இருந்தால் மட்டும் எழுந்திருங்கள்.

போதிய நீராகாரம் எடுப்பதும், மதுபானத்தைத் தவிர்பதும், காலுக்கு ஸ்டொகிங் அணிவதும், இதைத் தடுப்பதற்கு உதவும். ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் நிலவின்....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் மத்தியிலோ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களின் மத்தியிலோ இல்லை. வேண்டா வெறுப்பாக கட்சியின் யாப்பின் பிரகாரம் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையின் நீட்சியை அவர் விரும்பவில்லை என்கிற போதிலும், அவர்களின் வழியிலேயே சென்று கட்சியை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பதில் குறியாக இருப்பதாகவே கொள்ளவும் முடியும்.

இன்னொரு பக்கம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சியமைத்தால், தன்னுடைய கட்டுப்பாடுகளை மீறிய ஆட்சியொன்று நடைபெறும் சூழல் உருவாகும். அதனைத் தக்க வைப்பதற்காக தேர்தல் முறை மாற்றத்தினூடு பொதுத் தேர்தலை நடத்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை நாடாளுமன்றத்துக்குள் பலமாக வைத்திருப்பதன் மூலம் தேசிய அரசாங்கத்தை மீண்டும் உருவாக்கலாம் என்றும் அதுவே தன்னுடைய அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்கு அதிக பங்காற்றும் என்றும் மைத்திரிபால சிறிசேன கருதுகின்றார். அதன்போக்கிலேயே 100 நாள்கள் வேலைத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய பின்னர் பொதுத் தேர்தலுக்கு செல்லலாம் என்கிற நிலையை, அவர் எடுத்திருப்பதற்கு அல்லது அதனை தன் சார்பானவர்களினூடு (குறிப்பாக, ராஜித சேனாரத்ன) தொடர்ச்சியாக முன்மொழிந்து கொண்டிருப்பதற்கு காரணமாகும் என்றும் கொள்ள முடியும்.

பிராந்திய நாடுகளுடனான உறவை சீரமைக்கும் பயணங்கள் என்கிற பெயரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டுப் பயணங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டாலும் அந்தப் பயணங்களினூடு உள்நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற இழுபறிகளுக்குள் தான் இல்லை என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று கருதுகின்றாரோ என்று தெரியவில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் மீதான மக்கள் அதிருப்தியை அவர் நன்றாகவே உணர்ந்து கொண்டுவிட்டார். அதனைத்தான் அவர் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்.

அதுபோக, வரும் பொதுத்தேர்தல் தன்னுடைய நேரடிக் களமில்லை என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ந்து கொண்டிருக்கின்றார். என்ன இருந்தாலும், ஊழல் மோசடிகளினால் மக்களின் அதிருப்தியைப் பெற்ற முன்னாள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அங்கத்தவர்களும், தன் பின்னால் சேர்வதை அவர் விரும்பவில்லை. அதுதான்,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மஹிந்த அபிமானிகளை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்று கருதுகின்றார். ஊழல் மோசடிகாரர்களை விசாரணைகளினூடு வெளியேற்ற வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்தாலும், அதற்காக எடுக்கும் காலம் என்பது நீண்டுகொண்டேயிருப்பது தொடர்பில் அவர் எரிச்சலடைந்திருக்கின்றார்.

மறுபுறத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளின் மென்னகர்வினை ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றார். அதுதான் மீண்டும் மக்களிடம் ஊழல் மோசடிக்காரர்கள் என்கிற தோரணையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீது விமர்சனங்களை வைத்து வாக்குகளைக் கோர முடியும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஊழல் மோசடிக்காரர்களை அகற்றிவிட்டால் அது, ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை பாதிக்கும் என்று அவர் கருதுகின்றார். இன்னொரு பக்கம், மஹிந்த ராஜபக்ஷக்கு ஆதரவான கூட்டங்களை ரணில் விக்கிரமசிங்க ரசிப்பதற்கும் அதுதான் காரணம்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 70 சதவீதமானவை இன்னமும் மீதமிருக்கின்றன. ஆனால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை இரண்டாம் விடயமாக்கிவிட்டு, தன்னுடைய இருத்தலை தீர்மானிக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றத்தையும், பொதுத் தேர்தலையுமே பிரதான விடயங்களாக ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்துகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இவ்வளவு குழப்பங்களையும் எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல், தன்னுடைய கடிவாளத்தின் கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருக்கின்றார். அது, நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதல்ல.

இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியிலிருந்த ஒருவரை தோற்கடித்து அதே பதவியை கைப்பற்றியவர் என்கிற பெருமை மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு. அந்தப் பெருமை என்பது அவரினாலோ, அவர் சார்ப்புக் கட்சிகளினாலோ மட்டும் சாத்தியமானதல்ல. மக்களின் அபிமானம் மற்றும் அர்ப்பணிப்புக்களினாலும் ஆனது. அவ்வாறான நிலையில், மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் மைத்திரிபால சிறிசேன துணிச்சலான முடிவுகளை எடுக்க வேண்டும். அதுதான், அவரை வரலாறு பூராவும் தக்க வைக்க உதவும்!

# வரலாற்றில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட சிலாகித்துப் பேசப்படுகிறது. அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப இன்னும் யாரும் வரவில்லை என்பது திரையுலகின் தீர்ப்பு. மறக்க முடியாத பல படங்களிலும், கிளாமர் வேடங்களிலும், பாடல் காட்சிகளிலும், நடனங்களிலும் கலக்கியவர் சில்க். பத்து ஆண்டுகளுக்கு முன்பு திடீரென ஒரு நாள் தூக்கில் தொங்கினார் சில்க். ரசிகர்களின் மனதில் சோகம் தங்கியது. திரையுலகம் இனி இப்படி ஒரு நடிகையை எப்போது பெறப் போகிறோம் என்று ஏங்கியது. சில்க் ஸ்மிதாவும், வதந்திகள், சர்ச்சைகளும் கூடப் பிறந்தவை போல. சில்க் உயிருடன் இருந்தபோதும் பல்வேறு வதந்திகள், சர்ச்சைகளில் சிக்கினார். அவருடன் நிழல் போல இருந்த தாடிக்காரர் குறித்து செய்தி போடாத இதழ்களே கிடையாது. இப்போது சில்க் மறைந்து இத்தனை காலத்துக்குப் பிறகு புது சர்ச்சை ஒன்று கிளம்பியுள்ளது. அது திடுக்கிடும் செய்தியாக இருப்பதுதான் முக்கியமானது.

சில்க் குறித்து ஒரு சர்ச்சை புத்தகத்தை எழுதியுள்ளார் திருப்பதி ராஜா. அதில் சில்க் குறித்தும், அவரது மரணம் குறித்தும் எழுதியுள்ளார் திருப்பதி ராஜா.சில்க்கின் முதல் தமிழ்ப் படம் வண்டிச்சக்கரம் இல்லையாம். திருப்பதி ராஜா இயக்கிய வீணையும், நாதமும் என்ற படம்தான் முதல் படமாம். அதை அவரேதான் தயாரித்துள்ளார். விஜயலட்சுமி என்ற இயற் பெயர் கொண்ட சில்க்கை, விஜயலட்சுமி என்ற பெயரிலேயே அந்த படத்தில் நடிக்க வைத்தாராம் திருப்பதிராஜா.

எனக்கும், சில்க்குக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தரங்கமாகவும் தொடர்பு இருந்தது. ஆனால் தாடிக்கார டாக்டர்தான் என்னை சில்க்கிடமிருந்து பிரித்துவிட்டார். சில்க்கை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.நான் முதன் முதலில் சில்க்கை நடிக்க வைத்தபோது அவருக்கு கொடுத்த அட்வான்ஸ் ரூ. 16,000 தான். ஆனால் கடைசி காலத்தில் சில்க் கோடி



வரை சம்பளம் வாங்கினார். அவரிடம் நான் 1995ஆம் ஆண்டு நான் சிரமத்தில் இருப்பதாகக் கூறி நடிக்குமாறு கோரினேன். அவரும் ஒத்துக் கொண்டார். அதுதான் 'தங்கத்தாமரை'. ஆனால் படம் முடிவதற்குள்ளாகவே இறந்து விட்டார்.ஆனால் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு மோசமான நிலையில் அவர் இல்லை. அவர் கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனக்கு சில்க் ஸ்மிதாவின் கடைசிக்காலம் நன்றாகவே தெரியும் என்று கூறி இருக்கிறார் அவர்.

இதேவேளை சில்க்கின் ஒரே தம்பியான நாகவர பிரசாத் கூட சில்க்கின் மரணம் ஒரு கொலை என்றே மீண்டும் கூறியுள்ளார்.இதைப்பற்றி அவர் பத்திரிகைகளுக்கு சில நாளுக்கு முன்னர் அளித்த பேட்டியின் சாராம்சம்:

குடும்பப் பாங்காக நடிக்க விரும்பிய என் அக்கா ஸ்மிதாவை சொத்துக்காக சில்க் ஸ்மிதா என்ற கவர்ச்சி நடிகையாக்கிவிட்டனர். அவர் இறந்தது தற்கொலை அல்ல, சாவில் மர்மம் இருக்கிறது. நானும், சில்க் ஸ்மிதாவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தோம். அப்பா எங்கோ ஓடிப்போய்விட்டார். சாப்பாட்டுக்கே கஷ்டம். சில்க் ஸ்மிதாவுக்கு 17 வயது இருக்கும்போது அன்னபூர்ணம் என்ற பெண் சென்னைக்கு அழைத்து போய் சினிமாவில் நடிக்க வைத்தார்.சில்க் ஸ்மிதாவுக்கு சிறு வயதிலேயே திருமணம் நடந்தது. கணவன் ஓடிவிட்டான் என்றெல்லாம் அப்போது வதந்திகள் வந்தன. அவை எதுவும் உண்மை கிடையாது. சில்க் ஸ்மிதா முன்னணி நடிகையாக இருந்தபோது திருமணமாகி குழந்தைகளுடன் இருந்த ஒரு தாடிக்காரன் திடீரென வந்து ஒட்டிக்கொண்டார். கால்ஷீட் உள்ளிட்ட சினிமா சம்பந்தமான எல்லா வேலைகளையும் அந்த நபர்தான் கவனித்தார். அந்த நபரை சில்க் ஸ்மிதா ரொம்ப நம்பினார்.

ஒருநாள் வீடு ஒன்றை விலை பேசினார். அந்த வீட்டை தனது பெயரில் வாங்க அக்காள் விரும்பினார். ஆனால் கூட இருந்த நபர் தனது பெயரில் வாங்கும்படி நிர்ப்பந்தித்தார். இதனால் இருவருக்கும் தகராறு மூண்டது. சாவதற்கு சில நாளுக்கு முன் எனது தாய் சென்னை சென்று சில்க் ஸ்மிதாவுடன் தங்கிவிட்டு வந்தார். அவர் வந்த மூன்றாவது நாள் சில்க் ஸ்மிதா மின்விசிறியில் தொங்கி தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வந்தது.நாங்கள் அலறியடித்து ஓடினோம். எங்களிடம் என் வாழ்க்கையில் நிறையபேர் விளையாடிவிட்டனர். வாழ்க்கையே நாசமாகிவிட்டது என்று சில்க் ஸ்மிதா எழுதியது போன்ற ஒரு கடிதம் கொடுத்தனர். அதில் இருந்தது சில்க்ஸ்மிதா கையெழுத்து இல்லை. ஆதாரங்களை அழித்துவிட்டனர். ஸ்மிதா சாவில் மர்மம் இருக்கிறது.

'அலைகள் ஓய்வதில்லை' போன்று குடும்ப பாங்கான வேடங்களில் நடிக்கத்தான் விரும்பினார். ஆனால் காசுக்காக அவரை கவர்ச்சி நடிகையாக்கி விட்டனர். அவரை வைத்து மற்றவர்கள் சம்பாதித்தனர். இப்போதும் அதுதான் நடக்கிறது. செத்த பிறகும் அவரை மோசமாகச் சித்தரித்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். பாவம் என் அக்கா, பரிதாபமாக உயிரை விட்டதுதான் மிச்சம், என்றார்.

இவரது வாழ்க்கையை மையமாக வைத்து 2011ஆம் ஆண்டு 'த டர்டி பிக்சர்' என்ற திரைப்படம் வெளியானது. இந்தத்திரைப்படம் இந்தியாவில் பல மொழிகளில் வெளியிடப்பட்டது. இந்த படம் இவரது பிறந்தநாளான டிசம்பர் 2 அன்று வெளியானது.இதில் நடித்த வித்யாபாலனுக்கு தேசிய விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லக்ஸ்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஏப்ரல் 15ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org